திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9 7—10—55 : வெள்ளி : : விலை 3 அணா மலர் : 8

சென்னை நகரசபைத் தேர்தல்

வெற்றி பெற்ற சுயேச்சை யாளர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு

சென்னை நகரசபைத் தேர்தல் முடிவடைந்து, புதிய உறுப்பினர்களைக் கொண்ட முதற்கூட்டம் அக்டோபர் இறுதியில் (ஆல்டர்மென் ஐவரைத் தேர்ந்தெடுக்க) நடைபெறப் போவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தலில் போட்டி யிட்டவர்கள் — வெற்றி பெற்றவர்கள் — தேர்தல் நடைபெற்ற விதம் ஆகிய விவரங்களை சென்ற வாரம் வெளியிட்டிருந்தோம்—இவ்வாரமும் அதனின் தொடர்ச்சியாக 3-ம் பக்கத்தில் முழுவிவரம் வெளியிட்டிருக்கிறோம்.

சென்னை நகரசபைத் தேர்தலில் தங்கள் கட்சியின் சார்பில் உறுப்பினர்களைப் பொறுக்குவதற்கென்று காங்கிரஸ் கட்சியினரால் நியமிக்கப்பட்டகுழுவினர், உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த வகையில் அந்தந்த வட்டங்களின் உண்மை நிலையை அறியத் தவறி விட்டனர் என்றும், அந்தந்த வட்ட மக்களிடம் நெருங்கிய தொடர்பும் பொதுப்பணியில் ஓரளவு செல்வாக்கும் பெற்றவர்களை ஒதுக்கிவிட்டு "திடீர்" காங்கிரஸ்காரர்களை பொறுக்கி யெடுத்ததை எதிர்த்து சில பழைய காங்கிரஸ் தோழர்கள் போட்டியிட்டு வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

இத்தோழர்கள் தேர்தல் நடைபெறும் போது சம்பந்தப்பட்ட வாக்காளர்களிடம் கூறிய உறுதி மொழியினை வெற்றி பெற்றுள்ள இன்று நிறை வேற்றுவார்கள் என்றே வாக்காளர்கள் எதிர்பார்க்கின்றனர். அதுதான் பொதுப் பணியைச் சிறப்பிக்கும் பண்புகூட.

கட்சி அபேட்சர்களாகத் தங்களைத் தேர்ந்தெடுக்கவில்லை யென்பதற்காக காங்கிரசிலிருந்து விலகியும், காங்கிரசை எதிர்த்தும் போட்டியிட்ட அபேட்சகர்கள் காங்கிரசைப் பற்றி பொதுக் கூட்டத்தில் தந்த விமர்சனத்தை மறந்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறோம். வாக்காளர்களும் இப்பேர்ப்பட்டவர்களுக்கு பெருமிதமான ஆதரவைத் தந்திருக்கிறார்களென்றால் அவர்களின் நாணயத்தில் நம்பிக்கை வைத்தேயல்லாது காங்கிரசை விட இவர்கள் பலம் வாய்ந்தவர்கள் என்பதால் அல்ல.

அதுபோன்றே எக்கட்சியிலும் சாராத —அல்லது தங்கள் கட்சிகளின் பெயரைப் பயன் படுத்தாமல் தனிப்பட்ட நிலையில் நின்று வெற்றி பெற்ற தோழர்களும் வாக்காளர்களிடம் தெரிவித்துள்ள எண்ணங்களை அளித்துள்ள உறுதிகளை மறந்து விட மாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

ஆக, கட்சி பலத்தை மட்டும் வைத்துக் கொண்டு நகரசபையின் உண்மையான தொண்டினையே பாழ்படுத்திவரும் ஆதிக்கக்காரர்களின் போக்கினைத் திருத்த வேண்டுமானால்—திருத்த முடியாதெனில் அத்தகு பிற்போக்குப் படலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் வெற்றி பெற்ற சுயேச்சையாளர்களும், காங்கிரசின் அநீதியை எதிர்த்து அதன் பேரால் வெற்றி பெற்ற உண்மைக் காங்கிரஸ் தோழர்களும் தாங்கள் சம்பந்தப்பட்டுள்ள அரசியல் விவகாரங்களின் பேதாபேதங்களை அறவே மறந்து ஒருமித்த குழுவாக அமைத்துப் பணியாற்றுவார்களே யானால், சென்னை நகரசபையில் தலைவிரித்தாடிவரும் கட்சி

நக்கீரன்

ஆதிக்கங்கள் மண்ணைக் கவ்வும் என்பது திண்ணம். அதுமட்டுமல்ல, நகரசபையின் வாயிலாக மக்கள் எதிர்பார்க்கும் பணியும் சிறப்புறும் என்பதே நமது எடுத்துக்காட்டாகும்.

தேர்தல் முடிந்துவிட்டது. இன்னும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர்தானே வாக்காளர்களின் தயவு நமக்குத் தேவை என்ற அலட்சியத்தால் தங்களின் வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு ஆதிக்கக்காரர்களின் வலையில் சிக்கியோ அல்லது தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டோ வெற்றி பெற்ற சுயேச்சையாளர்களும், குறிப்பாக உண்மைக் காங்கிரஸ் ஊழியர்களும் தங்களின் வாக்குறுதியிலிருந்து— கண்ணியத்திலிருந்து தவறிவிட மாட்டார்கள் என்றே பெரிதும் நம்புகிறோம்.

இன்னும் சொல்லப்போனால் கட்சி ஆதிக்கக் கோஷ்டியின் செல்வாக்கினால் சுயேச்சையாளர்கள் எதைச் சாதிக்க விரும்புகிறார்களோ அதனை, சுயேச்சையாளர்களும் ஏனையோரும் சேர்ந்து ஒருமித்து பணியாற்றினால் பன்மடங்கு அதிகமாகச் சாதிக்க முடியும்.

தற்போது நடைபெற்ற தேர்தல் முடிவுப்படி பார்த்தாலும் தேர்தல்மூலம் வெற்றி பெற்றவர்களில் காங்கிரஸ் 38, ஏனையோர் 25. இதல்லாமல் தனிப்பட்ட நிறுவனங்கள் மூலம் பிரதிநிதித்துவம் வகிக்கும் 10 உறுப்பினர்கள், கட்சி ஆதிக்கத்திற்கு தலைவணங்குபவர்கள் என்று கூறுவதற்கில்லை.

எனவே சுயேச்சையாளர் உள்ளிட்ட 25 உறுப்பினர்களும் கட்சி வித்தியாசங்களை அறவே ஒதுக்கி வைத்துவிட்டு நகரசபையின் அடிப்படை எண்ணங்களுக்கேற்ப பணியாற்றுவார்களேயானால் நகர மக்களுக்கும் நன்மை பயக்கும்; நகரசபை நடவடிக்கைகளில் கட்சி ஆதிக்கம் செலுத்துவோர் கூட திருந்தக்கூடும்.

தங்களின் காரியம் முடிந்தவுடன் கட்சி விட்டு மாறுவதும், வாக்காளர்களை ஏமாற்ற மடையச் செய்வதுமான பித்தலாட்டங்கள் இனியாகிலும் மண்ணைக் கவ்வும் வகையில் சென்னை நகரசபைத் தேர்தலில் சுயேச்சையாளர்களாக வெற்றி பெற்ற அனைவரும் ஒருமித்திருந்து பணியாற்றுவதோடு அப்பணி எதிர்காலத்தில் நடைபெற யிருக்கும் தேர்தல்களுக்கு வழிகாட்டியாக இருக்கவும் ஆசைப்படுகிறோம்;

எனவே சுயேச்சையாளர்களும் ஏனையோரும் எமது இந்த எடுத்துக் காட்டை— வேண்டுகோளைச் சிந்தித்து ஏற்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மதுரை பழனி டாக்கீசில் 10—10—55 திங்கள் இரவு 10-30 மணி

கலைஞர் மு கருணாநிதி அவர்களின் முன்னிலையில்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின்

மணி மகுடம்

நாடகம் நடைபெறும். : டிக்கட்டிற்கு முந்துங்கள்

"மனிதர்கள், சட்டம், பகுத்தறிவு, மனச்சாட்சி..."

பி. காசிவிசுவலிங்கம்

சிவந்த ரோஜா காலைக் கதிரவனொளிபட்டு முல்லை நகை புரிந்தது. பற்பல இலைகள் மீது இரவு உறங்கிக் கிடந்த பனித்துளிகள் காலைக் கதிரவனின் கிரணங்களைக் கண்டு நாணிக் கோணித் தழும்பின. தேன் கசியும் கனிகளின் சுமை தாங்க மாட்டாத இளம் கொப்புகள் தலைவனின் தழுவலால் தலைதாழ்த்திய தலைவிபோல் தரை நோக்கி தாழ்ந்திருந்தன. குயிலொன்று குரலிசைத்து தன்னிருப்பிடத்தை தெரிவித்துக் கொண்டிருந்தது. சின்னஞ்சிறு இலைகளோடு தென்றல் விளையாடி மகிழ்ந்தது. அருகில் விரிந்து பரந்த பொய்கை படர்ந்திருந்த பனிப் போர்வை மெல்ல விலக்கிக் கொண்டிருந்தது. சின்ன சின்ன பலவர்ண சிட்டுகள் சிறகடித்துத் துள்ளிப் பறந்தன.

அருகில் சிறகால் அலகை சுத்தப்படுத்திக் கொண்டிருந்த நீல நிற மரங்கொத்தி திடீரென நீரில் பாய்ந்து 'கெண்டை விழியாள்' என்ற உவமைக்கு ஆதாரமாகப் பிறந்த கெண்டையொன்றை அலகிடுக்கில் தவழவிட்டு வெளியேறி கொப்பில் அமர்ந்துகொண்டது. பொய்கை தனக்கெழுந்த கோபத்தை தன் அசைவால் காண்பித்துக் கொண்டு பேச ஆரம்பித்தது.

"ஏண்டி மீன் கொத்தி! மூக்கு நீளமாக இருக்கிறது. நீரில் விழுந்து எழ முடியும் என்ற கர்வம்தானே உன்னை இப்படிச் செய்யச் சொல்லுகிறது?' ஈவிரக்கமில்லாமல் என்னைச் சார்ந்து வாழும் உயிரை பிரித்து விட்டதாமே" பொய்கை பேசிமுடித்து மரங்கொத்தியின் பதிலைக் கேட்க தயாராயிற்று.

மீன் கொத்தி கவ்விய மீனை மெல்ல விழுங்கிவிட்டு, ஏப்பம் விட்டுவிட்டு பதில் சொல்ல தலை குனிந்தது.

திடீரென தண்ணீரில் ஒருதுடுப் பசைவு—அதனால் ஏற்பட்ட வளையங்கள்—ஒரு பெரிய மீன் சின்ன மீனைக் கவ்விச் சென்றது.

"பொய்கையக்கா! பொய்கையக்கா! பார்த்தாயா? என்னை மட்டும் கோபித்துக் கொண்டாயே அதுமட்டும் நியாயமா?" என சிரித்துக் கொண்டே கேட்டது மீன்கொத்தி. பொய்கையில் விளைந்த வளைவுகள் கரையை மோதி நின்றது. பொய்கை பேசவில்லை.

அதற்குள் நீரில் தவறி விழுந்த வண்டொன்றை ஒரே விழுங்காக விழுங்க பல மீன்கள் போட்டியிட்டன. ஒரு மீன் 'வந்ததும் விழுங்கியதும் தெரியாமல்' காரியத்தை முடித்துக் கொண்டது.

"என்னக்கா யோசிக்கிறாய்"!? என அமைதியை மீண்டும் குலைத்தது மீன்கொத்தி.

எதை நினைக்க? எதை சிந்திக்க? நாமென்ன மனிதர்களா? மனிதர்களாக இருந்தால்' என ஒன்றும் புரியாமல் குறுக்குக் கேள்வியை போட்டது. மீன் கொத்தி.

ம்...என சலித்துக் கொண்டு பேச ஆரம்பித்தது பொய்கை, 'மனிதர்களுக்குள் சட்டம், பகுத்தறிவு, மனச்சாட்சி, இப்படி எத்தனையோ இருக்கிறது.'

குயில் பாடுவதை விட்டுவிட்டு உரையாடலை கவனிக்க அருகில் வந்து அமர்ந்து கொண்டது. கொட்டையை கொரித்துக் கொண்டிருந்த அணில் கொட்டையைப் போட்டுவிட்டு மீன்கொத்தி குருவி அமர்ந்திருந்த மரத்தில் ஏறிக்கொண்டது. மரப்பட்டையைக் கொத்திக் கொண்டிருந்த மரங்கொத்தி பொய்கை பக்கம் தலையைத் திருப்பியது. பசுமை நிற இலை[illegible] மறைந்திருந்த கிளியொன்று தன் கோவை நிற மூக்கை வெளியே நீட்டி 'கட்கட்கட்' என்று உரத்து தன்னையுமறியாமல் சிரித்தது.

"ஏனடி வளைந்த மூக்குக்காரி சிரிக்கிறாய்?' என்றன அத்தனையும் ஒரே சமயத்தில்—எதிர்பாராத ஒரு முகஎதிர்ப்பைக் கண்ட கிளி பேசாமல் வாயை மூடிக் கொண்டது.

கிளியின் பதிலை எதிர்பார்த்த அவைகள்—காய்ந்த இலைச் சருகுகள் காலடிகளால் நொறுங்கி ஒலியை உண்டாக்குவதைக் கேட்டு அமைதியை நீடித்தன.

காய்ந்த இலைச்சருகுகள் மீது "பஞ்செனச் சிவக்கும் மெண் கால் படைத்த பெண்ணொருத்தி—அவளைத் தொடர்ந்து ஒரு இளைஞன். இயற்கையோ!? விதியோ?! அவள் வாழ்வில் கரிபூசிவிட்டது என அறிவித்த வண்ணமிருந்தது அவள் முகம். ஆம்...பொட்டிடக் கூடாத, மலரணியக் கூடாத வெள்ளை உடுப்புக்காரி அவள்—அழகிருந்தென்ன—இளமை துள்ளிலென்ன வெண்ணிற சேலையுடன், வெறும் நெற்றியோடு இந்த காலையில் சமூகத்தின் முகத்தில் படாதவாறு தண்ணீர் எடுக்க வைத்து விட்டது. இளைஞனைப் பற்றி ஒன்றும் குறிப்பிடுவதற்கில்லை. இளைஞன்-அழகன்—அவளுக்கேற்றவன். அவள் அவனைப் பார்த்து மெல்லவலி பஉணர்வற்று சிரித்தாள். அவன் பூரணப்பொலிவுடன் சிரித்தான். அந்த சிரிப்பு 'நீ விதவையாக இல்லாவிட்டால் இப்படி சந்திக்க முடியுமா என்பதுபோல் இருந்தது. அவள் இடையின் வளைவை மிகைப்படுத்தி அழகுபடுத்திய குடத்தை இறக்கி வைத்துவிட்டு பொய்கை அருகில் அமர்ந்தாள்.

அமைதி...

அவன்தான் முதலில் பேச ஆரம்பித்தான். 'என்ன அழகு இத்தனை அமைதி?!

"ம்...என்னி[illegible]த்தில் என் நிலையில் என்ன பேசமுடியும்" பேச்சில் விரக்தியும் துயரமும் நிறைந்திருந்தது.

"பைத்தியக்காரி ஏன் தாழ்வு மனப்பான்மை. உலகத்தின் சிரிப்புக்கு அஞ்சி வாழப் பிறந்தவர்கள் மடிந்து விட வேண்டுமா?" சீர்திருத்த நெஞ்சம் கொண்ட இளைஞன் சொல்லிவிட்டு அவளை நோக்கினான்.

விழியில் உதிர்ந்த நீரைத் துடைத்துக் கொண்டு "நீங்கள் பேசலாம். உலகம்—

"என்ன அழகு! முத்தெடுப்பவன் கடலில் மூழ்காமல் இருக்க முடியுமா? ஏன் வேதனையை வளர்த்துக் கொள்கிறாய். உலகத்தைப்பற்றி ஏன் சிந்திக்கிறாய். அறிவு வேலியை கடந்து அறியாமை விளிம்பின் ஓரத்தில் நிறுத்தி துயரப் பள்ளத்தாக்கில் உன்னைத் தள்ளிவிட காத்திருக்கும் இன்ப புரியினரைப்பற்றி உனக்கென்ன கவலை"

"ஊரறிந்தால்"—

நன்றாக அறியட்டும். சமுதாயத்தின் பொறாமை பிரதிபலிப்புகள்—வரட்டுப் பேச்சுகள்—சுயநல அம்புகள்—கேலிக் கணைகள் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. இன்று மாலை என்னுடன் புறப்படு அணைந்துபோன உன் இல்லற வாழ்வு விளக்கை ஏற்றி வைக்கிறேன்! — நம்பிக்கை நிறைந்த அவள் கண்கள் சிறுக நீரைச் சிந்தின.

இலைச் சருகுகள் கனமான காலடிகள்பட்டு வருவோர் வருகையைத் தெரிவித்தது. அகன்ற விழிகள் ஒலிவந்த திக்கை நோக்கி தாமாக திரும்பின. வந்தவர் அந்த பெண்ணின் மாமனார். இருவரும் பயத்துடன் எழுந்து நின்றனர். அவர் மீசை துடித்தது. கரிய முகம் வியர்வையை அள்ளிக் கொட்டியது.

ஏண்டி ஓடுகாலி — விபசாரி, கொண்டவ போயிட்டா கண்டவனோடே கும்மாளமா போடுற. நாதாரி;—கிளி முதல் பொய்கை வரை காதைப் பொத்திக்கொண்டு நெஞ்சு படபடக்க கவனித்தன. ஏண்டா ஊர் பொண்ணுக்கு நீ துணையா? விபசாரி மவன ஒன்னை என்ன பண்றன்பாரு. பெரியவரின் கையிலிருந்த அறுவாள் கழுத்தை முத்தமிடச் சென்று அவன் கைகளைத் துண்டித்தது. சிதறிய சில துளி ரத்தம் பொய்கையில் விழுந்தது. பொய்கை கண்ணைக் கசக்கிக் கொண்டது. அழகு ஒன்றும் புரியாமல் நின்றாள். அவன் தற்பாதுகாப்பிற்காக இரண்டடி பின் தள்ளினான். அமீபா பூச்சியிலிருந்து மனிதனின் கடைசி முதல் வடிவமான குரங்குவரை வாழ்வுப் போராட்டத்தில் ஈடுபடும்போது அவன் மட்டும் விதிவிலக்கா? ஆனால் இந்த தடவை அறுவாள் குறி தவறவில்லை.

இளைஞனின் குரலைத் தொடர்ந்து பெண்ணின் கீச்சுக் குரல் அணிலை பயப்படுத்தி விட்டது. பிடிதவறி கீழே விழுந்த அணில் மெல்ல ஒரு ஓரத்தில் பதுங்கிக் கொண்டது. மீண்டும் இலைச்சருகுகள் நொறுங்கும் ஒலி. பெரியவர் அறுவாளை பொய்கையில் வீசி விட்டு ஓடலானார். அவள் விழிகளில் நீர்பெருக பொய்கையில் குதித்து விட்டாள். பொய்கை நீரைக் கரையில் சிந்தி அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டது! அணில் கண்ணை மூடிக் கொண்டது! மீன்கொத்தி மேலே எழுந்து மீனைக் கவ்வாமல் விட்டுவிட்டது.

கிளி அமைதியாக இருந்துவிட்டு சிரித்தது. அந்த சிரிப்பில் என்ன ஏளனம் "மனிதர்கள், சட்டம், பகுத்தறிவு, மனச்சாட்சி" கட் கட்...கிளி பறந்து போய் விட்டது.

பெரியவரின் (?) ஓட்டத்திற்கு காரணமாக உருவம்—ஒருவெள்ளாடு பிணத்தருகில்வந்துநின்றது ஆட்டை கசாப்புக் கடைக்கு அழைத்துப்போக தேடும் இடையனின் குரலைக் கேட்டு அது அவனை நோக்கி ஓடலாயிற்று.

எங்கோ வேளை தவறி கோழி கூவிக் கொண்டிருந்தது! ஏற்றச் சத்தம் மெல்ல கேட்டுக் கொண்டிருந்தது! ஆலயத்தின் சாம மணி ஒலித்து மற்ற குரல்களை அமிழ்த்தியது!

நீண்ட அமைதி!!

● சிறுகதை

வடகலையும் தமிழ்ப் பாசுரமும்!

●

வைணவ ஆச்சார்யா ஸ்ரீ வேதாந்த தேசிகரது மங்கள சாசன உற்சவம் திடுதிப்பென்று நிறுத்தப்பட்டுவிட்டது. அது காஞ்சிபுரத்தில் செப்டம்பர் 27-ல் நடைபெற இருந்தது. அவ்வாறு நிறுத்தப்பட்டதற்கு காரணம் என்ன! காஞ்சி வரதராசப் பெருமானுக்கு வடகலை அய்பங்கார்கள் தமிழ்ப் பாசுரங்களை அருச்சிக்கக் கூடாது என்று தடை உத்தரவு போட்டுவிட்டார் அறநிலையப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர். அத்தமிழ்ப் பாசுரங்கள் தேசிகராலேயே ஆக்கப்பட்டனவையாம்,

ஆ எங்கள் தேசிகரின் தமிழ்ப் பாசுரங்களுக்கா தடை! விட்டோமா பார்—என்று 'புரட்சி' பண்ணவே உற்சவத்தை நிறுத்திவிட்டார்கள் வடகலை அய்யங்கார்கள்.

எந்தத் தகராறிலேயோ இம்மாதிரி உற்சவங்களை அடியோடு நிறுத்தி விட்டால் நாட்டிற்கு நலந்தானே.

அது போகட்டும். இந்தத் தமிழ் அர்ச்சனை என்று கேட்டாலே ஏன் இப்படி அலறுதகள் சாமிகள்?

அதுவும் போகட்டும். வடகலைக்கும் தமிழுக்கும் என்ன தொடர்பு? குன்றக்குடியின் அண்டர்கிரவுண்டு வேலையோ! அப்படியும் குன்றக்குடிக்கும் வடகலைக்கும் என்ன உறவு! இதில் வடகலை—தென்கலை குடுமி பிடிசண்டை வலுத்ததா!—வலுக்குமா! அறநிலையப் பாதுகாப்பு அமைப்பு [illegible] டிய அவ்வளவு செருக்கடி என்ன! எல்லாம் வேடிக்கையாகத்தான் [illegible]!

சென்னை நகர சபைத் தேர்தல் முடிவுகள்.

வெற்றி பெற்றவர்களின் விவரமும், தேர்தலைப் பற்றிய விளக்கமும்

சென்னை நகரசபைக்கு மொத்த உறுப்பினர்கள் 78. இதில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் தொகை 63 இவர்கள் 5 'ஆல்டர்மென்' களைத் தேர்ந்தெடுப்பர். மற்றும் பல நிறுவனங்கள் 10 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பும்.

இந்த 78 பேர்களின்றி, சுகாதார இலாகா தலைமை அதிகாரி, சானிடரி எஞ்சினியர், நகர அபிவிருத்தி டிரஸ்ட் தலைவர் ஆகிய மூவரையும் தனி உறுப்பினர்களாக சர்க்கார் நியமிக்கும். ஆனால் இவர்களுக்கு ஓட்டுரிமையில்லை.

தேர்ந்தெடுக்கப்படும் 63 இடங்களில் 5 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், 4 இடங்கள் பெண்களுக்கும், 2 இடங்கள் தொழிற்சங்கமுடைய தொழிலாளர்களுக்கும், 2 இடங்கள் தொழிற்சங்கத்திற்குள் வராத தொழிலாளர்களுக்கும் ஒதுக்கப்பட்டவையாகும். ஒதுக்கப்பட்ட 13 இடங்கள் போக 50 இடங்களுக்கும் நகரத்தில் உள்ள 50 வட்டங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதி விதம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

காங்கிரஸ் கட்சி 57 இடங்களுக்குப் போட்டியிட்டு 38 இடங்களைப் பிடித்துள்ளது. இவற்றில் 7 இடங்களில் போட்டியின்றி வெற்றி கிடைத்தது.

சோஷலிஸ்டு தொழிலாளர் முன்னணி ஒன்பது இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களைப் பிடித்துள்ளது.

மா. சோ. கட்சியினர் 4 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களைப் பிடித்திருக்கின்றனர்.

மூன்று கம்யூனிஸ்டுகள் போட்டியிட்டுத் தோல்வி கண்டனர்.

மொத்தமாக 100 சுயேச்சைகள் போட்டியிட்டு 19 இடங்களைப் பெற்றிருக்கின்றனர்.

பொதுவில் வாக்குப் பதிவு மிக மந்தமாகவே இருந்தது. சுமார் 30 சதவிகிதத்தினர் மட்டுமே வாக்குப் பதிவு செய்திருக்கின்றனர்.

ஏற்கனவே உறுப்பினர்களாயிருந்தோரில் ஒன்பது பேர்கள் பதவி யிழந்தனர்

ஒரு காங்கிரசார் உட்பட 31 பேர்கள், தங்கள் ஜாமீன் தொகை இழந்தனர்.

50 வட்டங்களுக்கும் மொத்தமான வாக்காளர் எண்ணிக்கை 8,65,515 ஆகும்; ஆறு வட்டங்களில் வாக்குப் பதிவு இல்லை. எனவே இதர 44 வட்டங்களிலும் உள்ள மொத்த வாக்காளர் எண்ணிக்கை 7,85,865 ஆகும். இதில் வாக்களித்தவர் எண்ணிக்கை 2,99,900 மட்டும்தான் இது ஏறத்தாழ மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 38.2 சதவிகிதமாகிறது.

இந்தத் தேர்தலை நடத்துவதற்காகத் தேவைப்பட்டோரின் எண்ணிக்கை—வேலையாட்கள் நீங்கலாக—4,069 ஆகும்.

வாக்குகளை எண்ணுவதற்காக 144 அதிகாரிகளும், 34 தேர்தல் சாவடி அதிகாரிகளும் தேவைப்பட்டனர்.

இத்தேர்தலை நடத்த செப். 20 முதல் 24-ம் தேதிவரை 5 நாட்களும், ஓட்டுகளை எண்ண 26-ம் தேதி முதல் 30-ம்தேதிவரை 5 நாட்களும் ஆயின.

வட்டம்	பெயர்	...	கட்சி
1.	தங்கராசன்	...	காங்கிரஸ்
2.	பார்னஸ் பரமானந்தம்	...	சுயேச்சை
3.	கே. கணேசன்	...	,,
4.	சுந்தரமூர்த்தி செட்டியார்	...	காங்கிரஸ்
5.	செல்லப் பிள்ளை	...	சுயேச்சை
6.	என். தாமோதரன்	...	காங்கிரஸ்
7.	கே. ராமதாஸ்	...	,,
8.	கே. ஆறுமுகம்	...	,,
9.	வி. முனுசாமி (9-வதுவட்ட தி மு. க. செயலாளர்)	...	சுயேச்சை
10.	ஜி. ராசமன்னர்	...	பி. சோ.
11.	கே. எம். சீனிவாசன்	...	காங்கிரஸ்
	சரஸ்வதி பாண்டுரங்கம்	...	,,
12,	டி. அஜீசுதீன்	...	,,
13.	வி. ஆர். ராமநாதய்யர்	...	,,
14.	டாக்டர் அளகசிங்கரி	...	,,
15.	டாக்டர் சாமி	...	,,
16.	எம். கே. நாகேந்திரன்	...	சுயேச்சை
17.	எம். வரதராசலு	...	,,
	தோழியர் தனுபாய்	...	,,
18.	எம். ஈ. கோவிந்தராசன்	...	,,
	எ. சித்திரவேலு	...	,,
19.	எஸ். பக்கிரிசாமிப் பிள்ளை	...	சோ.முன்னணி
	கே.எம்.சாமுண்டேசுவரன்	...	,,
20.	டி. ஆண்டியப்பன்	...	காங்கிரஸ்
	ஆர். முனுசாமி	...	,,
21.	பி. இ. பக்தவத்சலம் (செ. மா. தி. க. துணைத் தலைவர்)	...	சுயேச்சை
22.	செல்லமய்ய நாயுடு	...	காங்கிரஸ்
23.	டி. எஸ். கோவிந்தசாமி	...	,,
24.	S.C.C.அந்தோணிப்பிள்ளை	...	சோ. மு.
25.	எம். ஆர். அப்பாதுரை	...	காங்கிரஸ்
26.	சுந்தரராஜ்	...	சுயேச்சை
27,	எம். பார்த்தசாரதி	...	,,
28.	ராகவச் செட்டி	...	காங்கிரஸ்
29.	அ. பொ. அரசு [(29-வதுவட்ட தி.மு.க. செயலாளர்)	...	சுயேச்சை
30.	சி. வி. திருவேங்கடம்	...	காங்கிரஸ்
31.	சம்பத்து	...	,,
32.	டாக்டர் சந்தோஷம்	...	,,
33.	ஜி. கிருஷ்ணன்	...	,,
	மாணிக்கவாசகம்	...	,,
34.	டி. பார்த்தசாரதி	...	காங்கிரஸ்
	கே. எம். நாதமுனி	...	,,
35.	கே. விநாயகம் எம்.எல்.எ.	...	சுயேச்சை
36.	எஸ். கிருஷ்ணமூர்த்தி	...	,,
37.	கே. கமலக்கண்ணன்	...	காங்கிரஸ்
38.	அகமத் பிஜீபுரி	...	,,
39.	தவுலத்ராம்	...	காங்கிரஸ்
40.	கே. எஸ். ஏகாம்பரம்	...	,,
	தோழியர் திருபுரசுந்தரி	...	,,
41.	என். ஈ. ரகுநாதன்	...	,,
42.	எம். எம். எம். ஹயாத்	...	சுயேச்சை
43.	டாக்டர் கரீம்	...	,,
44.	பி. எஸ். செட்டியார்	...	,,
45.	சி. ஆர். ராமசாமி	...	காங்கிரஸ்
	தோழியர் அனந்தநாயகி	...	,,
46.	டி. எம். சண்முகம் [செ. மா. தி. க. செயலாளர்]	...	சுயேச்சை
47.	கே. எம். சுப்ரமண்யம்	...	காங்கிரஸ்
48.	எம். கன்னியப்பன்	...	,,
49.	நரசிம்மராவ்	...	காங்கிரஸ்
50.	எ. ஜீ. ஆதிமூலம்	...	,,

ரயில்வே தொழிற்சங்கத் தொகுதி
எஸ். எ. மகாலிங்கம் ... சுயேச்சை

பஞ்சாலைத் தொழிலாளர் தொகுதி
சி. கே. நாராயணன் ... சோ. மு.

சங்கங்களைச் சாராத தொழிலாளர் தொகுதி—
வடக்கு—சி. கோவிந்தராசலு காங்கிரஸ்

மேற்படி—தெற்கு. பி. என். லட்சுமிபதி ,,

●

சென்னை வர்த்தக சம்மேளனம், ஜே. ஆர். டேவிஸ்

சென்னை தொழிலதிபர்கள் சங்கம், எஸ். அனந்தராமகிருஷ்ணன்

தென் இந்திய வர்த்தக சம்மேளனம், வி. எம். பி. முத்துசாமி

ஆந்திர வர்த்தக சம்மேளனம், பி. சூர்யநாராயணா

முஸ்லீம் வர்த்தக சம்மேளனம், எம். எஸ். எ. ரகீம்

நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்,
குமாரராஜா எம். எ. எம். முத்தையா

தென் இந்திய தோல் வியாபாரிகள் சங்கம், எ. எ. ரவீத்

சென்னை ஜவுளி வியாபாரச் சங்கம், ஜ்வாலா நரசிம்மம்

சென்னைத் துறைமுகப் பாதுகாப்புக்குழு,
ஜி. வெங்கிடேஸ்வர அய்யர்

சென்னைப் பல்கலைக் கழகம், தோழியர் தாராசெரியன்

8

காட்சி 21

இடம்...மதுரைவீரன் கோயிலின் அருகே பூசாரியின் வீடு.

நிலைமை [கயிற்றுக் கட்டிலிலே பூசாரி பொன்னுரங்கம் அமர்ந்திருக்கிறான். பலவேசமும் வீரனும் உள்ளே நுழைகின்றனர்]

பொன்னுரங்கம் : வாங்க தம்பிங்களா ஏது இந்தப் பக்கமா!

பல : சும்மா அப்படியே நடந்து கொடுத்தோம்—உன் நினைவு வந்தச்சு.

பொன் : என்ன தம்பி நம்மகிட்டயே விளையாடுறீங்களே. விஷயமில்லாமலா வருவீங்க!

(வெளியிலிருந்து வந்த பூசாரியின் மகள் கோகிலம்—புத்தகமும் கையுமாக உள்ளே நுழைகிறாள். அவளது சின்ன உதடுகள் ஏதோ ஒரு சிங்காரமான பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தன. உள்ளே பலவேசமும் வீரனுமிருந்ததைப் பார்த்ததும் வெட்கத்தோடு—அறைக்குள்ளே ஓடி விடுகிறாள்.)

பல : அடடே! கோகிலத்துக்குப் பாடக்கூட வருதே!

வீ : பேரே கோகிலம் — பாடவராமலா இருக்கும்.

பொன் : ஆமாந் தம்பி! பாட்டும் வருது ஆட்டமுந் தெரியுது—நல்ல படிப்பும் வந்திருக்கு...ஆனா...

பல : ஆனா...என்ன!

பொ : நம்ம தொழிலுக்குத்தான் வேட்டுவைக்குது!

வீ : தொழிலுக்கு வேட்டா!

பொன் : ஆமா தம்பி. இந்த பூசாரித் தொழில் ஊரை ஏமாத்துற வேலையாம்!

ப : அடடே! அதையுங் கண்டு பிடிச்சுடுச்சா...

பொ : கண்ட கண்ட புஸ்தகத்தைப் படிக்குதல்ல...அதனோடேபலன் இது! ஆண்டவனைக் காட்டி அடிவயிற்றை வளர்க்கிறோமாம். மதுரைவீரனைப் பார்க்கச் சொல்லி மடியைத் தட்டுகிறோமாம், காலங் கெட்டுப்போச்சு தம்பி!

(கோப முகத்தைக் காட்டிக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்த,)

கோகிலம் : ஆமா! காலங்கெட்டுத்தான் போச்சு, ஓங்களைப் போல பெரிய மனுஷரெல்லாம் (கையில் மறைத்து வைத்திருந்த சாராய பாட்டிலைக் காட்டிக் கொண்டே) இப்படி நடந்தால் நாடு உருப்படவா செய்யும்!

[பாட்டிலின் கார்க்கைத்திறந்து... சாராயத்தைக் கீழே கொட்டுகிறாள் கோகிலம்]

[கயிற்றுக் கட்டிலிலிருந்த பொன்னுரங்கம் பதறி எழுந்து]

கோகிலா! கோகிலா!...கொட்டாதே சொல்வதைக் கேள்!

கோ : நீங்கள் சொல்வதைக் கேட்க மாட்டேன் நான் சொல்வதைத்தான் நீங்கள் கேட்க வேண்டும். சாமியின் திரையைப் போர்த்திக் கொண்டு என் வீடு சாராயக் கடையாக மாறுவதை ஒரு நாளும் நான் ஒப்பமாட்டேன். மானத்தைப் பத்தி நீங்கள் கவலைப்படமாட்டீர்கள்...ஆனால் நான் வாழ வேண்டிய பெண்,...என் வீடு அக்ரமக்காரர்களுக்கு களமாவதும்......அதைச் சுற்றி போலீஸ் வட்டமிடுவதையும் ...நான் காணச் சகிக்க மாட்டேன்.

பொ : சுத்த அசட்டுப் பெண்ணாயிருக்கியே! நமக்கு மட்டுமா காய்ச்சுகிறோம் ...மதுரை வீரனுக்கும் சேர்த்துத்தானே காய்ச்சுகிறோம். நாம குடிக்காம யிருந்திடலாம்—ஆனா வீரனைப் பட்டினியாப் போடக்கூடாதம்மா! அது ஊருக்கே ஆகாது.

கோ : நாளைக்கு ஒங்க கையிலே விலங்கு பூட்டறப்ப......மதுரை வீரன் குறுக்க வந்து தடுக்க மாட்டான்னு—எனக்குத் தெரியும்! அப்பா! நீங்க எப்படி வேண்டுமானாலும் ஏமாற்றி வாழுங்க ஆனா: சர்க்காரையும் சட்டத்தையும் எதிர்க்காதிங்க!

ப : (சிரித்துக் கொண்டே) நல்ல சர்க்கார்! நல்ல சட்டம் இங்கே பென்னா ஆட்சியா நடத்துறானுக சுத்த ரெக்ரூட்டுக கும்மாளம் போடுறானுக! ஆட்சியாம் — கட்சியாம்! எல்லாம் சுத்த 'ஹம்பக்' கோகிலம்! நீ பொன்னுரங்கம் சாராயங் காய்ச்சி, சாமிக்குப் படைச்சு என்னைப் போல பக்தருக்குத் தருவது குற்றம்னு சொல்றே.........நீ பெரிசா நினைச்சிருக்கியே அந்த சர்க்கார் என்ன செய்யுது தெரியுமா! பெரிய பெரிய ஆசாமிக்கெல்லாம் — பங்களா வாசிக்கெல்லாம்.........வீட்டு நாய்க்கு வில்லை தர்ரது போல... பெர்மிட் தந்து குடிக்கவைக்குது. பணக்காரன் பாதத்திலே சர்க்காரும்—சட்டமும் எப்படிச் சாயுது பார்த்தியா.

பொ : ஆமா தம்பி நல்லாச் சொன்னே! நம்ம விஷயத்திலே போலீஸ் கீலீஸுன்னு எவனாவது தலையிட்டான் அவ்வளவுதான்! (பக்கத்திலிருந்த பெரிய அறிவாளை எடுத்துப் பதம் பார்த்துக் கொண்டே பொன்னுரங்கம் சிரிக்கிறான்)

கோ : அப்பா! கத்தியைக் காட்டி பயமுறுத்துகிற காலமில்லே இது! கட்டிவச்சு அடித்து கர்ஜனை புரிந்த காலமெல்லாம் மறைந்தே போச்சு புத்தியை உபயோகித்துக் காரியத்தைச் செய்யணும்.

பொ : ஓ! புத்தியை உபயோகிச்சுத் தானே காரியம் செய்யுறோம்.

கோ : அந்த புத்தி அழிவுப் பாதையிலேதான் கொண்டுபோய் நிறுத்தும்.

வீ : பொன்னுரங்கம் வாப்பா வெளியே போகலாம். தகராறு எதுக்கு அப்புறம், நம்ம 'ஐடியா'வே மறந்துடும்.

பொ : ஆமப்பா வா. கோயிலுக்கும் போகணும் நேரமாச்சு — இருட்டிட்டு வருது விளக்கேத்தணும்.

(மூவரும் வெளியேறுகின்றனர். கோகிலம் உள்ளே போய் விடுகிறாள்)

காட்சி 22

இடம்...மதுரைவீரன் கோயில்

நிலைமை [வீரன் சிலைக்குப் பக்கத்திலே தொங்கிக் கொண்டிருக்கும் தூண்டாமணியை ஏற்றிவைக்கிறான் பூசாரி பொன்னுரங்கம். அதே நெருப்புக் குச்சியை வாங்கி சிகரெட்டைப் பற்ற வைக்கிறான் பலவேசம்]

பொ : அபச்சாரம்! என்ன தம்பி சாமிக்குக் கொளுத்தின நெருப்புலே சிகரெட்டைப் பத்தவைக்கிறியே.

ப : என்ன பொன்னுரங்கம்! சாமி வேறே—நாமே வேறு! சாமிக்கு வைக்குற சாராயத்தை நாமதானே குடிச்சுத் தீர்க்கிறோம். நம்மைவிட மதுரைவீரனோடே வேறு யாரு இவ்வளவு உறவாடுறா: சொல்லப்போனா மதுரை வீரனே நமக்குக் காணிக்கை செலுத்துறான்.

வீ ; காணிக்கையா!

ப : ஆமப்பா! பக்தர்கள் வீரனுக்குக் காணிக்கை தர்ருங்க...வீரன் நமக்குத் தர்ரான். அதோ பார்! வீரன் நமக்குக் காணிக்கையாத் தந்த 'அட்சய பாத்திரம்'.

(மூலையிலுள்ள உண்டியலைச் சுட்டிக் காட்டுகிறான்—பலவேசம்)

பொ : பார்த்துப் பேசு தம்பி! பக்கத்துலே நின்னு யாராவது கேட்டுட்டா!

(யாரோ வரும் காலடி சப்தம் கேட்கிறது. அந்த மூவரும் அமைதியாகின்றனர். கோயிலுக்குள்ளே அடி எடுத்து வைக்கிறாள் ஒரு இளம் பெண். அவளின் முகத்திலே கலவர ரேகைகள் பதிந்து கிடக்கின்றன)

மா. தங்கவேலர்

பொ : வாம்மா தங்கச்சி......ஏது இந்த நேரத்திலே...

இளம்பெண் : அண்ணனுக்கு ஒரே காய்ச்சல்...ரெண்டு நாளா...படுத்த படுக்கையா யிருக்கு.

ப : டாக்டரிட்டே காமிச்சியாம்மா

பொ: ஹும்! டாக்டரெதுக்கு தம்பி இதோ 'சமயசஞ்சீவி'...வீரன் மருந்திருக்கு (கையிலிருக்கும் விபூதிப் பெட்டகத்தைக் காட்டுகிறான்) டாக்டர் ஆற்றுத் தண்ணியே ஊத்தித் தருவாரு அதைக் குடிச்சுக் குடிச்சு ஜன்னிதான் பிடிக்கும்.

இளம் : ஆமாங்க! டாக்டர் இந்த ரெண்டு நாளா தண்ணியைத்தான் அளந்தளந்து பாட்டுலுலே தந்தாரு. அதுலே ஒண்ணும் பலன் தெரியல்லே—அப்புறம் கோடிவீட்டுக் கோடாங்கியண்ணன் ஒங்ககிட்டே போகச் சொல்லுச்சு!

வீ : எப்படியம்மா பலன் தெரியும் பலன்தர்ர வீரன் இங்கே யிருக்கப்ப நீ யாரு யாரு கிட்டேயோ போனினா—நடக்குமா! போன மாசம் நம்ம வள்ளி கூட இப்படித்தான் படுத்த படுக்கையாக் கிடந்தது கடைசியிலே பொன்னுரங்கம் மருந்துதாம்பா வேலை செஞ்சுச்சு!

[பொட்டலமாகக்கட்டிய இரண்டு விபூதிப் பொட்டலங்களை இளம் பெண்ணிடம் பூசாரி தந்து கொண்டே]

...அம்மா தங்கச்சி—காலையிலேயும்' சாயந்திரமும் இதை வாயிலே போட்டு தண்ணியைக் குடிக்கச் சொல்லு வீரன் கிருபையாலே எல்லாம் சரியாப்போயிடும்.

இ : இந்தாங்க...! (கையிலிருக்கும் எட்டணாவைத் தருகிறாள்)

பொ : காணிக்கையா! என்கையிலே தராதே...அதோ உண்டியல்லே போடு.

[எட்டணா நாணயத்தை – உண்டியலிலே போட்டு விட்டு அந்த இளம் பெண் வெளியேறினாள் வாயில் கைக்குட்டையைத் திணித்து சிரிப்பை அடக்க முயல்கிறான் பலவேசம்)

பொ : என்ன தம்பி அப்படி அடக்க முடியாத சிரிப்பு.

ப : பொன்னுரங்கம், டாக்டர் கொடுத்த மருந்தை ஆற்றுத் தண்ணின்னியே நீ இப்பக் கொடுத்தது என்னவாம், சுத்த சுடுகாட்டுச் சாம்பல். இந்த மாதிரி ஒரு நாளைக்கு ரெண்டு 'கேஸ்' வந்தா போதும் வீரா...நம்ம பொன்னுரெங்கம்—பொன்சுரங்கத்துக்கே சொந்தக்காரராயிடுவாரு.

வீ : ஆமப்பா, இருந்திருந்தும் இந்தத் தொழிலுக்குப்போயி கோகிலம் வெடிவைக்கணும்னுச்சே, பைத்தியக்காரப் பொண்ணு. பொண்ணுரங்கம் காலிலே ஊரே விழுந்து கிடக்குது!

பொ : கலாட்டா பண்ணாதிங்க தம்பி வாங்க விஷயத்துக்கு வருவோம்,

ப : (பாக்கெட்டிலிருந்த ஒரு சிகரெட்டை எடுத்து பூசாரியிடம் நீட்டிக் கொண்டே) இந்தா பொன்னுரங்கம்

பொ : எனக்கெதுக்கு தம்பி இது? மதுரைவீரன் குடிச்ச சுருட்டு மாடத்திலே இருக்குது, நான் எடுத்துக்கிறேன்

(சுருட்டை எடுத்து பற்றவைத்துக் கொண்டு திண்ணையிலே அமருகிறான் பொன்னுரங்கம். சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டே பலவேசமும் வீனும் பக்கத்திலே அமருகின்றனர், சுருட்டுப் புகையும்—சிகரெட் புகையும் ஒன்றோடொன்று கலந்துகொண்டிருந்தன.)

...பலவேசம் பொன்னுரங்கத்தின் காதிலே ரகசியம் கூறுகிறான். பொன்னுரங்கம் தலையசைத்து மறுத்துக் கொண்டே

பொ : போங்க தம்பி ஆபத்தான வேலை. கிகம்பரரே நீ சாமானியமா நினைச்சிருக்கே. அவரு குணம் எனக்கு நல்லாத் தெரியும் வம்பை விலைக்கு வாங்காதீங்க. வேறு வேலை யிருந்தா சொல்லுங்க செய்றேன், இதைமட்டும் செய்யச் சொல்லாதீங்க.

ப ; ஆபத்தைப் பற்றிக் கவலைப் படாதே. நாங்க யிருக்கிறோம். தூண்டில் பிடிச்சிருக்கவனுங்க நாங்க, அந்தத் தூண்டில் ஆற்றோடே அடிச்சிட்டுப் போறதைப் பார்த்துட்டாயிருப்போம்.

பொ ; வேண்டாந் தம்பி. புற்றிலே யிருக்கிற பாம்பைப் பிடிச்சு தலையிலேயா போட்டுக்கிறது! முன்னாடியே உங்க மாமா நீ 'தண்ணி போட்டுட்டு இங்கே படுத்திருந்ததைப் பார்த்துட்டு என்னிடம் வந்து ஏக கலாட்டா பண்ணினாரு. ஊருக்குப் பெரிய மனுஷன் அவரு. அவருடைய விரோதத்தை சம்பாதிச்சுக்கிறது—எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலே,

வீ : உன்னை நாங்க காட்டிக் கொடுத்தாத்தானே விஷயம் புரியும்!

ப : ராஜம் எனக்குச் சொந்தமாகத் தானே வேண்டும்!

பொ : மறுக்கவில்லை — அதுக்காக இந்த வழியிலே போறது...

ப : இப்படித்தான் போகவேண்டும் முழுவிபரத்தையும் பின்னாலும் சொல்லுகிறேன். முதலில் நீ காரியத்தைச் செய்து முடி—வெற்றி தேடித்தா.

(அடுத்த வாரம்)

ஏஜெண்டுகள் தேவை

தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், ஆகிய மொழிகளில் ரப்பர் ஸ்டாம்பு தயார் செய்கிறோம். விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை உடனே விண்ணப்பிக்கவும்.

அருணா ரப்பர் ஸ்டாம்ப் ஒர்க்ஸ்

குடியேற்றம் (வ. ஆ. மா.) : : (தென் இந்தியா)

திராவிடன்

சென்னை : 7—10—55 : வெள்ளி

பண்டிதரின் பசப்பலும் குழப்பமும்!

●

இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்கள் இத்திங்கள் 2-ம் நாளன்று சென்னை கோட்டை மதில் மீது நின்று 90 நிமிட நேரம் பேசியிருக்கிறார்!

இம்முறை அவரது பேச்சில் ஓரளவு நாவடக்கம் இருந்ததே யன்றி நேர்மை உள்ளத்துடன் பேசியதாக கூறுவதற்கில்லை. இன்னும் சொல்லப்போனால் தென்னாட்டு மக்களின் சிறப்புகளை எடுத்துக்காட்டி பசப்பிவிட்டு அதே சமயத்தில் இந்தி மொழி ஆதிக்கத்தை இங்கு நிலைபெறச் செய்யவும், திராவிடத்தின் அரசியலகாலை என்றென்றும் டெல்லி தேவதைகளின் பிடிப்பில் சிக்கவைத்திருக்கவுமான தமது எண்ணத்தை தடுமாற்றத்துடன் வெளியிட்டிருக்கிறார்! குறிப்பாக இந்தி மொழி பிரச்னையைப்பற்றி அவர் பேசுகையில் :

"இந்தியாவின் தேசிய மொழிகளில் இந்தியும் ஒன்று. அது போலவே தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளும் இந்திய தேசிய மொழிகளின் சிறப்பைப் பெற்றிருக்கின்றன, எனினும் மிகச் சுலபத்தில் அனைவரும் பேசக்கூடிய—புரிந்து கொள்ளக்கூடிய மொழி இந்தியாகயிருப்பதால், அதனை இந்திய அரசின் அலுவலக மொழியாக அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆயினும் ஐக்கிய நாட்டுச் சபையில் கலந்து கொள்ளவும், உலக நாடுகளிடையே நாம் தொடர்பு கொள்ளவும் ஓர் அந்நிய மொழி கட்டாயம் தேவைப்படுகிறது, அதனை இந்தி மொழி நிறைவேற்ற முடியாதாகையால், அந்நிய மொழிகளிலே எல்லா நாடுகளிலும் பொதுவாக பேசப்படுவதும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதுமான ஆங்கிலத்தையும் நாம் தொடர்ந்து கற்க வேண்டும், உலக மொழிகளில் ஆங்கிலத்திற்கு உள்ள தனிச் சிறப்பு வேறெந்த மொழிக்கும் கிடையாது, எனினும் இந்திய அரசின் அலுவலக மொழியாக ஆங்கிலத்தை நாம் ஏற்பதற்கில்லை. ஆகவேதான் இந்தியை இந்திய மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்திய அரசினர் விரும்புகின்றனர், இதற்காக அதைக் கட்டாயமாக எப்பகுதியினர் மீதும் திணிக்க விரும்பவில்லை, அதுபோலவே தமிழையோ, தெலுங்கையோ வடநாட்டவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்திய அரசாங்கம் அறிவுறுத்தி வருகிறது. இவ்விதமிருக்கையில் சிலர் இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வதும், தென்னாட்டினர் மீது இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது என்று கூறுவதும் அர்த்தமிருக்கிறதா" என்று அங்கலாய்த்திருக்கிறார் நேரு பண்டிதர்!

இந்தியத் துணைக் கண்டத்தில் அடங்கியுள்ள ராஜ்யங்களின்—ராஜ்யங்களுக்குற்பட்ட மக்களின் பண்பு, பழக்கவழக்கம், கலாச்சாரம் ஆகியவைகளை ஓரளவு நல்லறிவும் நேர்மைப் புத்தியும் கொண்டு சிந்திப்பவர்கள் எவரும் ஒன்றுக்கொன்று ஒட்டவைக்க முடியாத வேறுபாடுகள் மலிந்திருப்பதை மனதார உணரக்கூடும்,

இந்திய கலாச்சாரத்திற்கும் ஆங்கிலேய—சீன—அமெரிக்க—ரஷ்ய கலாச்சாரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளைப் போலத்தான் வடநாட்டு கலாச்சாரத்திற்கும், தென்னாட்டு கலாச்சாரத்திற்கும் தவிர்க்க முடியாத வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே ஆங்கிலேயர்கள் தென்னாட்டினருக்கு அந்நியர் என்றால், வடநாட்டினரும் தென்னாட்டினருக்கு ஏறத்தாழ அந்நியர்களே யல்லாது இந்தியர் அனைவரும் ஒன்று என கூப்பாடு போடுவதில் அறிவுடைமையிருக்க முடியுமா?

இவ்வித போக்கு—யானைக்குக் கோவணம் கட்ட முனைந்த பைத்தியக்கார சேஷ்டைகளுக்குத்தான் ஒப்பிட முடியுமேயன்றி வேறில்லை.

எனவேதான் சென்னை மேல் சபையில் இந்தி பிரச்சனையைப் பற்றி எதிர்கட்சித்தலைவரும், கல்வித் துறையில் தனிச்சிறப்பும், உலக நாடுகளிடையே பெருமதிப்பும், அசைக்க முடியாத நிறைவுபெற்ற அனுபவமும் உள்ள டாக்டர் எ, லட்சுமணசாமி அவர்கள் தமது எண்ணத்தைத் தெரிவிக்கையில், "இந்தி மொழி கட்டாயமாக திணிக்கப் படவில்லை யென்று சொல்லிக்கொண்டே, கட்டாயமாகப் புகுத்தப்படுகிறதென்றும், இந்தி மொழி தென்னாட்டினருக்கு அந்நிய மொழி அல்ல என்று யாராவது வாதிட முடியுமா" யென்றும் அறைகூவல் விடுத்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் வடநாட்டினரின் மொழி ஆதிக்கத்தை எதிர்க்கும் போதெல்லாம், அதற்கு அரசியல் முலாம் பூசி எதிர்க் கட்சியினர் இப்படித்தான் பேசித்திரிவர் என்று அர்த்தமற்ற வாதங்களை புரியலாம் ஆளும் வர்க்கத்தினர். ஆனால் டாக்டர் எ. லட்சுமணசாமி போன்ற கல்வித்துறை நிபுணர்களின் அறிவுரையையாவது ஆளும் வர்க்கத்தினரின் தலைவர் பீடத்தில் அமர்ந்துள்ள நேரு பண்டிதர் தமது புத்தியில் பதிய வைத்துக்கொண்டு ஆவன செய்ய முற்படாமல் கவைக்குதவாத பேச்சுகளைப் பேசி காலத்தை வீணாக்குவது குறித்து வருந்துகிறோம்.

நிற்க, நேரு பண்டிதரின் வாதப்படி பார்த்தாலும் இந்திமொழியைவிட ஆங்கிலமே உலகனைத்தும் பேசக் கூடியதாயிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்தியாவின் பல்வேறு ராஜ்ய மக்களும் ஆங்கிலம் அறிந்தவர்களாவர். எனவே அந்தந்த ராஜ்ய மக்கள் ஆட்சி மொழியாக அந்தந்த மாநில மொழியையும் பொதுமொழியாக ஆங்கிலத்தையும் கொள்வது தானே எளிதும்—நியாயமும் உடையதாகும் என்று கேட்கிறோம்.

அடுத்து நேரு பண்டிதர் கோட்டை மதில்சுவர் பேச்சில் குறிப்பிட்டிருப்பது இந்தியாவின் ஒற்றுமைப் பற்றியதாகும். அப்பிரச்சனையிலும் அவர் வழக்கம்போலவே "வேறுபாடுகள் பலயிருப்பினும் இந்தியா ஒன்றுபட்ட தன்மையுடன் வாழவேண்டும்" என்ற உபதேசத்தைக் கூறி மற்ற மாநிலங்களை அடக்கி ஆளவும் இதற்குப் பெயர்தான் ஒற்றுமை என்பதாகவும் கருதி அந்த வித்தையில் தமக்குள்ள "அபார திறமையை"க் காட்டியிருக்கிறார்.

ஆக, தென்னாட்டினரை மொழித் துறையிலும்—அரசியல் துறையிலும் எவ்விதத்திலும் அடக்கியே ஆளுவது என்ற எண்ணத்தை மனதில் வைத்தே இம்முறையும் பேசியிருக்கிறாரேயல்லாது தென்னாட்டினரின் மனவேதனையையும் அதன் காரணமாக உருவாகி வரும் மகத்தான சக்தியினையும் அறிந்து தெளிவுபெற முயற்சித்தாரில்லை.

நேரு பண்டிதரின் சென்னை கோட்டை மதில்சுவர் பேச்சு அவரின் சுபாவத்திற்கு மாறுபட்ட தன்மையில் ஓரளவு நாவடக்கத்துடன் இருந்ததென்றால் அதற்குக் காரணம் நவம்பர் இறுதியில் ரஷ்யப்பிரதமர் புல்கானின் அவர்களுடன் சென்னைவர நேர்ந்தால்—தென்னாட்டினரின் மனக்குமுறல் தமது ஆட்சியின் அவலட்சணத்தை அம்பலமாக்கி விடுமே என்ற எண்ணத்தால் தமது சுபாவத்தை மிகவும் கட்டுப்படுத்திக் கொண்டு இவ்வாறு பசப்பியும் தடுமாற்றத்துடனும் பேசியிருக்கக் கூடுமென்று கருதுகிறோம். என்றாலும் நேரு பண்டிதர் தமது சுபாவத்தை வேலூர் பொதுக்கூட்டத்தில் காட்டியிருப்பதாகத் தெரிகிறது. நாட்டுப் பிரிவினைக் கொள்கையை எதிர்த்தும் மிரட்டியும் பேசி யிருக்கிறார். சட்டியில் இருப்பதுதானே அகப்பையில் வரும்! ஆதிக்கக்காரர்களிடம் இவ்வித பத்தாம் பசலிப் போக்கினைத்தானே எதிர்பார்க்க முடியும்?

முடிச்சூர் இராமச்சந்திரன்

சென்னை மாணவர் மன்ற முன்னாள் துணைத் தலைவரும் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் சகோதரரும் மாணவருமாகிய முடிச்சூர் இராமச்சந்திரன் அவர்கள் இயற்கை யெய்தினார் என்ற செய்தி கேட்டு திடுக்கிட்டோம். நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் இந்தி எதிர்ப்புப்போரிலே பெருந்துணையாக நின்றவர். அத்தகு சிறப்புடைய நண்பர் இராமச்சந்திரன் நம்மை விட்டுப் பிரிந்தமைக்கு மிகவும் வருந்தலுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு நமதாழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நடக்க இருப்பவை

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

பேசின் பிரிட்ஜ் தொழிற் சங்க சார்பில் 7-10-55 வெள்ளி மாலை 6-மணிக்கு சூளை கான்ரான்ஸ்மித் நகர் திரு: வி. க. திடலில் சங்கத் தலைவர் எஸ். பக்கிரிசாமிப் பிள்ளை எல். எல். எ., தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். தி. மு. க. துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர் சி. பி. சிற்றரசு, எஸ். வி. வி. அந்தோணிப் பிள்ளை எம். எல். எ., பேசுவர். அதுசமயம் மேற்படி சங்க சார்பில் தி. மு. க. மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும்.

கோவையில் முத்தமிழ் விழா

9—10—55 ஞாயிறு காலை 9மணிக்கு ராயல் தியேட்டரில் முத்தமிழ் விழா நடைபெறும். புலவர்கள் நா. சுந்தரராசனார், மருதவாணனார், இளங்கோ சொற்பொழிவாற்றுவர். காலை 10 மணிக்கு இசைமுரசு நாகூர் இ. எம். அனீபா குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

நன்கொடை : ரூ. 10, 5, 2, 1, அணா 8,

ஆள்வார்பேட்டை

46-வது வட்ட தி. மு கழக சார்பில் 9—10—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு பீமண்ணன் பேட்டை அருகில் உள்ள திடலில் நடைபெறும். தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் தலைமை வகிப்பார். தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஆர். டி. அரசு பேசுவர். அதுசமயம் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் சென்னை கோகலே மண்டபத்தில் 'மக்களும் ஆட்சியும்' என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவு ஒலிபரப்பப்படும்.

இலங்கை தி. மு. க, கொழும்புகிளை உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்

அன்புடையீர் வணக்கம். இ தி. மு. க. தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க உறுப்பினர் கூட்டம் 9-10-55 அன்று கழகப் பணிமனையில் மாலை 4-30 மணிக்கு நடைபெற யிருக்கிறது. கிளையின் உறுப்பினர்கள் தவறாது வருகை தந்து சிறப்பித்துத் தரும்படி வேண்டிக் கொள்கிறேன் என துணைச்செயலாளர் வி. எஸ். முருகன் அறிவிக்கிறார்.

தென்பகுதி இரயில்வே மென் யூனியன் (S. R. M. U.)

சென்னை கிளையின் பொதுக் குழு 13—10—55 வியாழன் மாலை 6-30 மணிக்கு சைதாப்பேட்டை, கடைத் தெரு 95-ம் எண்ணுள்ள இல்லத்தில், மத்திய சங்க தலைவர் திரு இராகவானந்தம் அவர்கள் தலைமையில் கூடும். உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுகிறேன் என செயலாளர் சாமிநாதன் அறிவிக்கிறார்.

காரைக்கால்

9-10-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு தி. மு கழக சார்பில் சினிமா தியேட்டர் அருகில் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

தேனாம்பேட்டை

நகரசபைத் தேர்தலில் (46-வது வட்டம்) வெற்றிப் பெற்ற தோழர் டி. எம். சண்முகம் அவர்களைப் பாராட்டி 9-10-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு சென்னை தேனாம்பேட்டை—போலீஸ் ஸ்டேஷன் எதிரில் தோழர் கபாலி அவர்கள் தலைமையில் கவிஞர் கண்ணதாசன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர். மாலை 8-மணிக்கு ஊர்வலமும் நடைபெறும்.

முதல் முகலாயப் பேரரசி — சரித்திரச் சித்திரம்

சுல்தானா ரசியா

கௌதமன்

6

பேச்சின் எதிரொலி 3

ரஸியாவைப் பற்றி

கொலுமண்டபத்தார்

அவமானம்! அவமானம்! பெருத்த அவமானம் நமக்கெல்லாம்!

என்னப்பா, அப்படிப் பறிபோய்விட்டது நம்முடைய மானமெல்லாம்!

மக்களின் மாமன்றத்தின் முன்பு, தலைபிறக்க மேற்படுத்திவிட்டார்களே இளவரசியார்! இதைவிட வேறென்ன அவமானம் வேண்டும்.

இளவரசியாருக்குப் 'பட்டம்' இல்லையென்று அன்று சொன்னேமே அவரின் தந்தையார் அவரை வாரிசாக ஏற்படுத்தியிருந்துங்கூட—அப்போது எவ்வளவு அவமானம் அடைந்திருப்பார்கள் இளவரசியார்!

அது நமது புனித மதத்தை பாதித்த காரணத்தினுலேதான் நாமதைத் தடுத்தோம்!

அதன் பலன் என்ன தெரியுமா!

என்னவாயிருந்தாலும் என்ன! நடந்தது நடந்தாகிவிட்டது......இப்போது என்ன செய்யப் போகிறீர்கள் இந்த மகத்தான நெருக்கடிக்கு...!

செய்வது என்ன இருக்கிறது நேர்மையைப் பேசுகிறார் இளவரசியார்... தவறு நம்முடையது...எதுங்கெட்டது களையெல்லாம் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்தால்...வருவதை அனுபவிப்பதும் நம்முடைய பொறுப்பில்தானே இருக்கிறது·

உங்கள் முடிவுதான் என்ன!

ருக்னுதீனை நீக்கித்தானாக வேண்டும்! அவர் மீது நமக்கு நம்பிக்கையில்லை... இளவரசியாரை நேற்றுப் பள்ளிவாசலில் சந்திக்காத முன்பிருந்தே நமக்கிந்த எண்ணமிருந்தது. ஆனாலும் நாமே அதை வெளிக்குக் காட்டிக்கொண்டால் நமக்குத்தானே அவமானம்! எனவேதான் நாமதைச் செய்யாமல் இருந்தோம். ஆனால் இப்போது அதற்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. மக்களின் கிளர்ச்சிக்கு வாய்ப்பிருக்கிறது எனவே 'தாறுமாறு ஆட்சி' என்ற குற்றஞ்சாட்டி நாமெண்ணியதை விரைவில் செய்து முடிக்க இதுதான் தகுந்த சமயம்.

ஆமாம் வெகுவிரைவில்தான் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும்... இல்லையேல் இளவரசியைக் கொல்லவும் துணியமாட்டார்கள் அந்த முடியாசைக்காரர்கள்!

முதலில் இளவரசியாரைப் பாதுகாக்க வேண்டும்...பிறகு மணிமுடியை மாற்ற வேண்டும்.

எதையும் உடனடியாகச் செய்வது தான் அறிவுடமை!

இல்லையேல் நிலைமை மாறும்—மோசமாகும்!

உங்களிருவருக்கும் மத்தியிலே ஒரு வார்த்தை! ......இளவரசியாரைத்தான் மன்னர் ருக்னுதீனின் இடத்தில் நியமிக்கப் போகிறீர்களா...!

ஆமாம்! அதிலென்ன இன்னும் சந்தேகமிருக்கிறது...!

இல்லை, நான் கேட்டதற்குக்காரணம் அதுவல்ல — வேறொன்று மிருக்கிறது. இளவரசியாரை அரியணைக்கு வெளியில் கொண்டு வந்து நிறுத்தியதே மதக் கோட்பாடுகள் தானே...!

ஆமாம்!

இஸ்லாமிய முறைப்படி ஒரு பெண்ணால் ஆளப்படுவது என்பது இழுக்கு என்பதால்தானே... அவர் வெளியேற்றப்பட்டார்...!'

அதுமட்டுமல்ல இளவரசியார் பர்தா அனுஷ்டிப்பதில்லை!

ஆடவர் மத்தியிலே நன்றாகப் பழகுகிறார்கள்.

கவசமேந்தி போர்க்களம் செல்லுகிறார்கள்.

ஹூம்! இதெல்லாம் ஒரு பெண்ணுக்கு வேண்டாதது—தேவையில்லாதது—என்று கருதித்தானே மணிமுடி தரவில்லை அவர்களுக்கு...!

ஆமாம்!

ஆனால் இப்போது...!

இப்போது மக்களதை ஏற்கிறார்கள் ...நாம் இழுக்கு என்று எண்ணியதை தவறு என்று எடுத்துக் காட்டுகிறார்கள், மக்கள்!

நாம் இந்த ஒரு தவறு மட்டுந்தானு செய்தோம்...எவ்வளவோ தவறுதல்கள்...அதிலே இதுவும் ஒன்று இல்லையா...!

அவர்களிஷ்டப்படித்தான் நடப்பதாக நாம் வாக்குறுதி தந்துவிட்டோமே...

வீண் வாதம் ஏன்...! பொறுத்திருந்துதான் பார்ப்போமே...எதையும்.

தோழர்களே! நடக்க வேண்டியதைக் கவனிக்க வேண்டுகிறேன்...!

நடக்க வேண்டியதை இவ்வளவு பகிரங்கமாகவா சொல்லிக் கொள்வது! இதனால் எதிரிகளல்லவோ ஏற்றமடைவர்...நம் எண்ணமும் கைகூடாதல்லவா! எனவே எதுவும் திடீர் தாக்குதலாகவே இருக்கவேண்டும்...எதிர்பார்க்கக் கூடாது எவரும்...அந்த நேரத்திலேதான் அரச மன்றத்திலேயே கவர வேண்டும் மணிமுடியை! மறுகணமே அதை இளவரசியாரை ஏற்கச் செய்யவும் வேண்டும்.

அதுதான் நல்ல யோசனை! அப்போதுதான் சதியும் செய்ய முடியாது எவராலும்!

ஹூம், நாமேதான் சதிகாரர்களாயிற்றே நமக்கெதிராகவும் ஒரு சதி நடக்குமா! கிடக்குது விட்டுத்தள்ளுங்கள்.

ஏனய்யா உம்மையே நீர் தாழ்த்திக் கொள்ளுகிறீர்!

நண்பர்களே! வீண் வாதம் வேண்டாயிப்போது...நாளை சந்திக்கலாம், மன்னன் ஆல்டாமிஷுக்குக் கொடுத்த வாக்குறுதியைத்தான் நிறைவேற்ற முடியாவிட்டாலும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியையாகிலும் நிறைவேற்றி வைக்கலாம் வாருங்கள்!

மேலே விவரிக்கப்பட்ட உரையாடல்கள் மூன்றும் இளவரசி ரசியாவின் முறையீட்டாலெழுந்த எதிரொலிகளாகும், மக்களிடம் வெற்றபெற்ற அந்த வேல்விழியாள் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அரண்மனைக்குப் போய் சேர்ந்த மறுகணத்திலேயிருந்து நாட்டிலே உலவிய பல்வேறு பிரிவினரின் உள்ளத்தை பல்வேறு கோணங்களிலே யிருந்தும் தடவிப் பார்த்து விட்டது இந்த ரஸியாவின் பிரச்னை,

இதற்கெனப் பறிமாறிக் கொள்ளப்பட்ட வாதப் பிரதிவாதங்கள்தான் மேலே காணுவது! யார் யார் என்னென்ன நினைத்திருக்கக் கூடும்—எவர் எவர் என்னென்ன பேசியிருக்கக்கூடும் என்பதன் எண்ண ஓவியந்தான் மேலே தரப்பட்டிருப்பது! ஆனால் அதே நேரத்தில் ரஸியா என்னென்ன எண்ணியிருப்பாள் தனது முயற்சிதந்த வெற்றிபற்றி. விண்ணுயர் கோபுரத்தினிடம் தினமும் குறைகூறி குறைகூறி ஓர் தெளிவைக் கண்ட ரஸியா இறுதியில் தனக்குக் கிடைத்த கடைசி ஆயுதமாம்! அந்தப் பள்ளிவாசல் தந்த வெற்றிபற்றி என்னென்னதான் எண்ணி யிருப்பாள், எதைத்தான் பேசி யிருப்பாள் அவள் உள்ளம் எப்படித்தான் தன் எதிர்காலத்தைச் சித்தரிக்கும்! அதையுந்தான் பார்ப்போமே!

*

ஜமால்! இப்படி அருகில் வா! உட்கார்!

பரவாயில்லை இளவரசியாரே!

என்ன ஜமால்! என் பக்கத்திலா உட்காரச் சொல்லுகிறேன்,

இதோ இப்படி உட்காரென்று தானே சொல்லுகிறேன்! உட்கார!

பரவாயில்லை இளவரசியாரே. தங்களன்பிருந்தால் போதுமிந்த அடிமைக்கு!

அடிமை யென்று சொல்லாதே ஜமால். அந்த இழுக்கு வார்த்தையை நானெப்போதோ அகற்றி விட்டேன் இந்த அந்தப்புர அகராதியிலின்றும். ரஸியாவுக்கு அந்த நிறபேதம் என்றுமே இருந்ததில்லை ஜமால்!

உங்களன்பிற்கு என் நன்றி இளவரசியாரே!

'நன்றா யிருக்கிறது ஜமால், யாருக்கு யார் நன்றி செலுத்த வேண்டும். உங்கள் எல்லோருக்குமல்லவா நான் நன்றி செலுத்த வேண்டும். உங்களின் ஒத்துழைப்பே இல்லாவிட்டால் நானெப்படி இங்கே உயிர் வாழமுடியும்! கொடுமைச் சுரங்கத்தில் தள்ளப்பட்டுக் கிடக்கும் எனக்கு உங்கள் போன்றார் தானே உற்றார், உறவினர், சுற்றம் செழுங்கிளை எல்லாம்!

எப்படியோ ஒன்று உங்களுக்குப் பட்டங் கிடைத்து விட்டால் அதுவே எமக்குப் பரமானந்தம்!

நீ என்ன நினைக்கிறாய் ஜமால்! பட்டம் கிடைக்குமா எனக்கு!

நேற்று நீங்கள் எவ்வளவு மனமுருகிப் பேசினீர்கள் இளவரசியாரே, இதற்குள்ளாகவா மறந்து விடுவார்களதை நமதருமை இஸ்லாமியப் பெருமக்கள். அவர்களின் மீது நம்பிக்கைக் கொள்ளுங்கள். நிச்சயம் நமக்கு அவர்களின் உதவி கிடைக்கும். விரோதிகளென நம்மை நினைத்துக் கொண்டிருந்த ஓம்ராக்களும் பிரபுக்களுமே இன்று நம் மீது பரிவும், இரக்கமும் காட்ட முன் வந்திருக்கிறார்களென்றால் நாட்டின் பிதாக்களாம் அவர்களுக்கா அன்புள்ளமிருக்காது? கவலையற்று இருங்கள் அரசியாரே! ஆனால் அதே நேரத்தில் மிக மிக ஜாக்கிரதையாவு மிருங்கள், மதயானையைப் பிடிக்க குழிவெட்டியிருக்கிறோம். ஆனால் அந்த வெறியானை குழியில் விழுமுன் நாம் சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். விழி பழுதானவனுக்கு முகிற் கூட்டங்களின் அருமை தெரியாது. ஞான சூன்யத்திற்குப் பகுத்தறிவின் மேன்மை விளங்காது, கொடுமைக்காரர்களுக்கு நேர்மையின் மகத்துவமும் வஞ்சகர்களுக்கு நீதியின் பெருமிதமும் நிச்சயமாகத் தெரியாது, தெரியமுடியாது எனவே அந்தக்கொடுங்கோலர்களின் கண்முன் படவேகூடாது தாங்கள்.

ஹூம்! நீ இருக்கும்போது எவரிங்கே நெருங்க முடியும் ஜமால். மாளிகையின் பட்டாளமே கூடி எதிர்த்தாலும் உன் திண்தோள் திறமை எனக்குத் தெரியாதா! 'பட்டம்' கிடைக்கட்டும் ஜமால், பிறகு பார் ரஸியாவின்... கண்ணியத்தை.

ஆம் ரஸியாவின் கண்ணியத்திற்கு மட்டுமல்ல அவளின் இருவிழிகளுக்கும் அப்போதுதான் வேலை· பட்டம் கிடைக்கட்டும் என்று ஏங்கிக் கிடந்தாள் அந்த வனிதை.பள்ளிவாசலிலே பேச்சு—ஆனால் அதுகவர்ந்ததோ நாடெங்கும்· ஆனால் ருக்னுதீனுக்குத்தான் அனுதாபம் காட்டவும் ஆளில்லாமற் போய்விட்டது. அவன் ஓர் ஆளும் மன்னன் அவனுக்கு படைபலம் உண்டு, சதிக்கும் சூதுக்கும் ஆள் அம்பும் உண்டு, அப்படியிருந்தும் அனுதாபம் மட்டும் கிடைக்கவில்லையவனுக்கு! காரணம்—புதிதல்ல. அவன் புகழ் (!) அவ்வளவுதான் 4 மாத ஆட்சி அதிலே இரண்டு மூன்று கொலைகள்! நாடோ படுகளம்!

இதுதான் அவனாட்சியின் லாப நஷ்டக் கணக்குகள்! அவனாட்சிக்கு அணிகலன்களாக விளங்கியதும் அவைகள் தான்! எனவே எப்படிக் கிடைக்கும் அனுதாபம் அவனுக்கு! ஆட்சிப் பீடமளித்த பிரபுக்களுக்கும், பிரதானியருக்குமே அவனைப் பிடிக்கவில்லை யென்றால்—மதத் தலைவர்களுக்கும், ஓம்ராக்களுக்குமே அவன்மீது மட்டில்லாத வெறுப்பும் அவநம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டதென்றால்—எவர் விரும்புவர் அவனை! அதோடு அவனின் கோணலாட்சியின் முகமூடியை வேறு ரஸியா கிழித்தே எறிந்து விட்டாள் பள்ளிவாசலில். இந்நிலையில் வெறுப்புணர்ச்சி வேகமாகத்தான் வளர்ந்தது. எனவே நாடே ஏகமனதாகத் தீர்மானித்தது ருக்னுதீனை உடனே ஆட்சிப் பீடத்தினின்றும் நீக்கிவிட வேண்டுமென்று!

ஆனால் இந்த நிலையிலும் அந்தத் துருக்கிய சிங்காரி தனது சதி நினைப்பை மாற்றிக் கொள்ளவே யில்லை! எதையாவது—எப்படியாவது செய்து என்ற சொற்றொடர்களினால் தனது 'செல்வனின்' பட்டத்தையே நிலைநிறுத்த அரும்பாடு படத்தான் செய்தாள் அந்த அகங்காரி! ஆனால் பாவம் வெற்றிதான் கிடைக்கவில்லை அந்த ஆணவக்காரிக்கு!

இதன் எதிரொலியென மறுநாள் அரச அவையிலே குழப்பமேற்பட்டது! அரியணை யேறியிருந்த ருக்னுதீனுக்கு இதனால் அச்சம் மட்டுமல்ல; ஆபத்தும் ஏற்படுகின்ற வகையிலே அந்தச் சூழ்நிலையில் புதியதோர் விறுவிப்பொன்றும் தோன்றி யெழுந்தது. பீடத்தைச் சுற்றியிருந்த மாமன்றம் பேசத்தொடங்கியது. பிரதானியர் ருக்னுதீனுக்கும் பிரிவுபசாரம் கூறத்தயாரா யிருந்தனர். ஓம்ராக்களின் தலைவர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உரக்கப் படித்தார் பிரபுக்கள் அதை ஆமோதித்தனர்! மக்கள் அதை ஆரவாரத்தால் ஏற்றனர். ருக்னுதீனே கொப்பளிக்கும் கண்ணீர் தனது இரு கண்களிலேயும் வழிந்தோட அதை வரவேற்றான்! ஆம்! வரவேற்கத்தானே வேண்டும்! வேறென்ன செய்யமுடியும் அவனால்! (தொடரும்)

தலைமைக் கழகம் : அறிக்கை—30/55

சித்தூர் மாவட்ட தி. மு. க. கிளைத் தேர்தல்

சித்தூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கிளைத் தேர்தல் 16—10—55 ஞாயிறன்று பிற்பகல் 2-மணிக்குச் சித்தூர் மாதா கோவில் தெரு, தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்தி வைப்பார்.

சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகளின் மாவட்டப் பிரதிநிதிகள், தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப் பெறும் உரிமைச் சீட்டுடன் தேர்தலில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

என். வி. நடராசன்

துணைப்பொதுச்செயலாளர், தி. மு. க.

'நேரு பண்டிதரின் நா நர்த்தனம்!'

"ஆயிரம் உண்டு இங்கு ஜாதி—எனில் அந்நியர் வந்து புகலென்ன நீதி"

என அன்று தேசிய கவி பாரதியார் பாடினர்! அப்பாடலின் மூலம் அந்நியரைச் சாடினர்! பாரதியாரின் கவிதைகளில் உயர்வு, தேசிய உணர்ச்சி ஆகியவைகள் மிகுந்திருப்பினும், மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ள பாடலில் பொருள் இருக்கிறதா இல்லையா என்ற ஐயப்பாட்டினைவிட முன்னுக்குப்பின் முரணான கருத்துக்கள் வெளிப்படையாகத் தெரிகிற தென்பதை நேர்மைபுத்தி படைத்தவர்கள் ஒப்புக் கொள்ளத்தான் செய்வர்.

ஆயிரம் ஜாதிகளும் அதனைத் தொடர்ந்து சகிக்க முடியாத வேறுபாடுகளும் தலைவிரித்தாடினுல் அந்நியன் ஆதிக்கஞ் செலுத்த முயற்சிக்கதானே செய்வான். எனவே சிக்கத் ஜாதிகளாகப் பிரிந்து அவ்ஆயிரம் பேதைகளே, உங்கள் அறியலவுறும் யனை ஆட்சி பீடத்தில் ...மைை அந்நி விட்டதே இனியாகி ...அமரச் செய்து வீர்" என்று எடுத்தும் அறிவுபெறுதால் அதிலே ...த்துக் காட்டியிருந் பாரதியாரே ...ஷர்த்தமுண்டு. ஆனல் சாடுவதைச அந்நியரைத் தீவிரமாக டா... மட்டுமே பெருந் தொண் டெ... ...ண்டார். அந்நியரைவிட ... புரிந்த ஆரியத்தை அழு... ...கிறேன் — ஓபாமல் ...னர்!

*

இந்தியப் பிரதமர் பதவியைச் சுமந்துள்ள நேரு பண்டிதரும், பாரதியாரின் பாடலிலே—பாடவில்லை—ஆனல் பேசியிருக்கிருர்!

இத்திங்கள் 3-ம் நாள் கஞ்சையில் நேரு பண்டிதர் பேசுகையில் :—

"இந்த நாட்டிலே அநேக இராஜயங்கள் இருந்திருக்கின்றன. பல மதங்களும், மொழிகளும், நம்பிக்கைகளும் இருந்திருக்கின்றன. என்றாலும் இத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் நாம் ஒற்றுமைப்பட்ட ஒரு நாட்டவராக இருந்து வருகிரேம். 'இந்தியக் குடியரசு' மக்களாக விளங்குகிரேம் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் எனவே, மதவேறுபாடுகளோ மாநில வேறுபாடுகளோ, மொழி வேறுபாடுகளோ, நாம் 'ஒற்றுமை'யாகச் செயல்படுவதற்கு குறுக்கில் நிற்க அனுமதிக்கக் கூடாது.

இந்திய மக்கள் மிக நல்லவர்கள்; புத்திசாலிகள்; ஆனல் ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக் கொள்வர். அதனுல் அவர்கள் பலவீனப்பட்டு விடுவதினுல், மற்றவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்—என்று இந்திய சரித்திரம் கற்றுத்தரும் பாடத்தையும் மறந்துவிடக்கூடாது. மறுபடியும் அந்த நிலைக்கு நாம் ஆளாகிவிடக் கூடாது. நம்மிடையே உள்ள வேறுபாடுகள் நமது 'ஒற்றுமை'க்குக் குறுக்கே நிற்க அனுமதிக்கக் கூடாது"

என்று குறிப்பிட்டிருக்கிருர்!—வேறுபாடுகள் கொண்ட மக்களையோ—ராஜயங்களையோ எத்தனை காலத்துக்கு 'ஒற்றுமை ஆலாபனை' செய்து ஒன்றுபடுத்தி வாழவைக்க இயலும் !

ஒன்று — அவ்வேறு பாட்டினை அறவே ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் நேரு பண்டிதர்கள் துணிந்து இறங்க வேண்டும்; அதற்கு ஆற்றல் இல்லையெனில் — அல்லது மனவளம் பெறவில்லை யென்ருல், அடிப்படையிலேயே வேறுபட்ட மக்களை—ராஜயங்களைப் பிரித்துவிட்டு அவரவர்களின் கலாச்சாரப்படி வாழ வழிவிட வேண்டும். அதனைவிடுத்து இரண்டும் கெட்டான் தன்மையில் வழி மறைத்து நின்றுக் கொண்டு தீர்க்க முடியாத வேறுபாடுகளில் ஒற்றுமை காண வேண்டும் எனப் பேசி காலத்தைப் போக்குவது நேர்மையான செயல்தானு என்பது நேரு பண்டிதர்களின் சிந்தனைக்கு எட்டியிருப்பதாகத் தெரியவில்லை.

ஆட்சி பீடத்தின் உச்சியில் நின்றுகொண்டு இவ்வித ... கலைக்குதவாத உபதேசம் செய்வது ...லரின் காதுக்கினிமையாக இருக்குமேயல்லாது நடைமுறையில் பண்டிதரின் ...ல்லவி செயல்படுமா —...ா என்பதை காலம் உ...த்திருக்குமரு போகிறது. வேறு ...ார்த்தக்தான் ...ட மக்களை ஒருவருக் பாடுகளைக் கொ... ...இ ஆளாமலும், ஒருகொருவர் அட... ...ருரு கலாச்சாரத்தை கலாச்சாரம் மற்... ...மலும் சுதந்திர அடிமை கொ... தனித்... ...யங்க வழிவகுப் முன் வாழ—... வேறுபாட்ட மக்களும் பதுதான் அர... நேசப் பான்மையுடன் ராஜயங்களும், வழிவகுத்... காதுமே இயங்கவாவது ...மைப் பல்லவி ...பாடித்திரியன்றி 'ஒற்...மாகாது. வது' விவே...

காஷ்மீர நேரு பண்டிதர் எனவே ...றை வைத்து அழுகி... அவர்கள், ... புனுகிட்டு மேனுகி... புண்ணுக்கு செய்வதுபோல இந்தியக் கித்தனம் ...டத்தில் பல வேறுபாடுகளை துணைக்கல் ...ாச்சார பாகுபாடுகளையும் யும் கல மக்களை ஒரே மூக்கணுங் கொண்ட... ...நினைப்பது அவர் 'ஆசைபடும்' ஒற்றுமைக்கு இறுதியாக பேராபத்தை விளைவிக்கும் என்பதை உணரவேண்டுகிரேம்.

—நக்கீரன்

பொள்ளாச்சியில் 56 மணி நேர இடைவிடாத சைகிள் சவாரி

பொள்ளாச்சி தி. மு. கழக உறுப்பினரும் கே. எஸ். பாண்டியன் படிப்பக நிர்வாகக்குழு உறுப்பினருமான வி. அர்ச்சுனன் அவர்கள் பார்க்ரோடு மக்கான் திடலில் 8-9-55 வியாழன் காலை 7-மணிக்கு நகரசபை உறுப்பினர்களான டாக்டர் எ. சுப்பையன் தலைமையில் வி. ரங்கசாமி அவர்கள் துவக்கி வைக்கப்பட்டு 10—9—55 சனி மாலை 4 மணியளவில் 56 மணி நேர சைகிள் சவாரி முடிவுற்றது அன்னரை பாராட்டி படிப்பகத் தோழர்களும் மற்றும் பலரும் மாலைகள் அணிவித்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு அன்பளிப்புத் தொகைகளும் வெள்ளிப்பதக்கங்களும் கொடுத்து கௌரவித்தனர். முன்னுள் நீதிபதி திரு. விசயராகவன் அவர்கள் அன்னரைப் பாராட்டி அன்பளிப்புத் தொகையும் ஒரு தங்கப் பதக்கமும் அளித்து சிறப்பித்தனர்.

'அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்!'

உல்லாச புரியினர் உழைக்க முற்பட்டனர்!

பத்தாம் பசலி சாஸ்திரங்கள் இப்போது என்ன செய்கிறது!

●

புல்லேந்திகளான பார்ப்பனர்கள் கலப்பை ஏந்துகிற காட்சி திருச்சி மாவட்டத்தில் உள்ள அந்தநல்லூர் கிராம மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

கடந்த ஜூன் திங்கள் முதல் இந்த கிராமத்தில் உள்ள மிராசுதார்களுக்கும்—பெரும்பாலானேர் பார்ப்பனர்கள்—விவசாயிகளுக்குமிடையில் குடிவாரம் சம்மந்தமாகத் தகராறு நீடித்து வருகிறது. அதன் விளைவாக, ஏற்கனவே குறுகிய கால 'குறுவை' பயிரிட முடியாது போய்விட்டதாலும், தகராறு தொடர்ந்து நீடிப்பதினுலும் நீண்ட கால சம்பா பயிருக்கும் 'பட்டம்' நெருங்கிவிட்டதாலும் தாங்களே நிலத்தில் இறங்கி உழுவதுஎன்று முடிவுக்கு வந்த மிராசுதார்கள் கடந்த செப்டம்பர் 29-ந்தேதியன்று ஏர் கலப்பை சகிதம் நிலத்தில் இறங்கி உழ முற்பட்டனராம்!

சாஸ்திரப்படி பார்ப்பனர்கள் உழவு வேலை செய்யக் கூடாதல்லவா? எனவே இந்தக் காட்சியை கிராம மக்கள் கூடி நின்று வேடிக்கைப் பார்த்திருக்கின்றனர்.

இவ்விதம் பயிரிடுவதைத் தடுக்க விவசாயிகள் முற்படக் கூடாதெனவும், முற்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திருச்சி மாவட்ட நிர்வாக உதவி அதிகாரி எச்சரிக்கைவிடுத் திருப்பதுடன், ஆயுதந் தரித்த போலீசாரையும், கிராமத்தில் நிறுத்தி வைத்திருக்கிருராம்!

"கம்யூனிஸ்டுகளின் பரந்த நோக்கம்"!

கொத்தமங்கலத்தில் 1-10-55 சனி இரவு 8-மணிக்கு விவசாய சங்க ஆரம்பவிழா தோழர் மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது. விவசாய சங்கத்தில் எல்லாத் தோழர்களும் கட்சிபேதமின்றி சேரலாம் என்று சொல்லி விட்டு கம்யூனிஸ்ட் கொடியை ஏற்றினர்கள். இதுபற்றி ஒருவிவசாயத் தொழிலாளர் கேள்வி கேட்டதற்கு நாங்கள் தான் வேலை செய்கிரேம் அதனுல்தான் இந்தக் கொடியை ஏற்றுகிரேம் என்று சொன்னர்கள். மேலும் சில கேள்விகள் கேட்கப்பட்டன. தக்க பதில் கூருமல் கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்டுகள் மழுப்பி முடித்தனர். —(ந. நி.)

மணிமேகலை

பொன்னேரி வட்ட மேலூர் தி. மு. க, செயலாளர் சண்முகம்—கமலம்மாள் ஆகியோரின் பெண் குழந்தைக்கு 2—10—55 அன்று மேலூரில் நடைபெற்ற தி. மு. கழக பொதுக்கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்களால் மணிமேகலை என்று பெயரிடப்பட்டது. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அளிக்கப்பட்டது.

பாக்கியம் பால்ராஜ்

திண்டுக்கல் வட்டச் சாலைபுதூர் தோழர் பால்ராஜ அவர்களின் துணைவியாரான பாக்கியம் அம்மையாருக்கு 1—10—55 மாலை 6-25 மணிக்கு ஆண்குழந்தை பிறந்தது, தாயும் சேயும் நலம். இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அனுப்பப்பட்டது.

"தினத்தந்தி" செய்திக்கு மறுப்பு

சென்னை (இராயப்பேட்டை) 37வது வட்டத்தில் 23—9—55-ல் நடந்த நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பாக கே கமலக்கண்ணன் அவர்களும் சுயேச்சையாக டி. டி. அரசு அவர்களும் போட்டியிட்டதில் தோழர் கமலக்கண்ணன் வெற்றி பெற்ருர். தோழர் டி. டி. அரசு எந்தக் கட்சியையும் சார்ந்தவரல்ல குறிப்பாக தி. மு. க. உறுப்பினருமல்ல இவ்விதமிருக்க உண்மைக்கு மாருக; 23-9-55 தினத்தந்தியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த டி. டி. அரசு சுயேட்சையாக நின்று தோல்வி யடைந்தார் என்று செய்தி வெளியாகி யுள்ளது. இது மிகவும் தவறு. தோழர் டி. டி. அரசு அவர்களை கழகத் தோழர்களில் சிலர் தனிப்பட்ட முறையில்தான் ஆதரித்தார்களேயன்றி வேறில்லை. எனவே 'தினத்தந்தி' தனது இத்தவறைத் திருத்தி அதை வெளியிடுமாறு நினைவூட்டுகிரேம்.

கோ. இளவரசு
செயலாளர்
தி. மு. க, 37-வது வட்டம்

எமது மகத்தான துவக்க விழா

கலைஞர் மு. கருணாநிதி தீட்டிய புதிய நாடகம்

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில்

7—10—55 வெள்ளி முதல் தினசரி

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும்

மணிமகுடம்

நாடகம் நடைபெறும்

கட்டணம் : 2—8—0, 1—8—0, 0—12—0, 0—6—0
பெண்களுக்குத் தரை 0—4—0

குறிப்பு : ஏராளமான பொருட் செலவில் தயாரித்த புதிய சீன்களுடனும், டெக்னிக் கலர் காட்சிகளுடனும் நாடகம் நடைபெறும். பிரதி திங்கள் தோறும் விடுமுறை.

செய்திகள்

பம்பாய்

நண்பர்கள் படிப்பகம்

திராவிட நாட்டுப் பிரிவினை நாளை முன்னிட்டு, நண்பர்கள் படிப்பக உறுப்பினர்களனைவருக்கும், படிப்பகச் செயலாளர் த. மூ. பொற்கோ சார்பில் சாந்தாசியா சாலில் 25-9-55 ஞாயிறு இரவு 9-30 மணிக்கு தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது. தோழர் ஆ. மைவாதன் அவர்கள் தலைமையில் தோழர்களான எம். சங்கர் எஸ். எம். அப்பையா, பெ. த.மூ. இர. ஆரிய சங்கரன், டி. என். பாக்ராஜ ஆகியோர் விருந்திற்கு நன்றி தெரிவித்தும், படிப்பக வளர்ச்சி குறித்தும், அதற்கு நற்பணியாற்றிவரும் தோழர்களான ஜி.பி. வேலு, பி. கிருட்டிணன், பொற்கோ ஆகியோருக்கும் இல்லத்தை கொடுத்துவரும் தோழர் பி. என் மாடசாமி அவர்கட்கும் நன்றி கூறிச் சொற்பொழிவாற்றினர்.

தோழர் எம். சங்கர் அவர்களின் இசைக் குழுவினரான எ பால்டீன், வேவின் செல்லத்துரை ஜி. பி. வேபா ஆகியோரின் உயரிய இசையரங்கு சிறப்புற நடந்தேறியது.

தாளு விழா

19-9-55 காலை 10-மணிக்கு சங்கர் இல்லத்தில், நம்பி நாராயணன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம் இராசகோபால் செயலாளராகவும்; டி. செல்லவாணன் துணைச்செயலாளராகவும் தோழர் எஸ். வி. மலை பொருளாளராகவும் ... மார் ... பொதுக் குழு ... மபிச்சிறுர் ... தவா ... பாத்திநிதியாக தோழர் நம்பி நாராயணன்; தோழர் வி. நம்பி முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் திராவிட நாடு பிரிவினைப் பற்றி, தோழர் சண்முகராசன், தோழர் டி. வி. சாமி, தோழர் த. மூ. பொற்கோ, ப. தி. மூ. க. பொதுச் செயலாளர் தோழர் என் தியாகராசன் முதலியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

தாராவி திராவிட முன்னேற்ற கழகத் தோழர் கோதை ராசன் இயற்கை எய்தியமைக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பெங்களூர்

அம்மிப்பேட்டை தி. மு. க. வின் செயற்குழுக் கூட்டம் 2—10—55 ஞாயிறு மாலை 3 மணிக்கு கழக மனையில் வி. கே. நடேசன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெங்களூர் மாவட்ட முன்னாள் செயலாளர்பிரான்சிஸ் B Sc அவர்களின் தந்தை இராசரத்தினம் இயற்கை எய்தியமைக்காக இக்குழு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறது.

17—7—55 அன்று நடைபெற்ற பொதுச்செயலாளர் வரவேற்பு பொதுக் கூட்டத்திற்கு கழகம் ஒலிபெருக்கி அனுமதி கோரியிருந்தும் அரசாங்கம் அனுமதி கொடுக்க மறுத்ததை எதிர்த்து சிறை தண்டனை அனுபவித்த எ. டி. பிரான்சிஸ் அவர்களை இக்குழு பாராட்டுகிறது.

சிறப்புச் சொற்பொழிவு கூட்ட வரவு செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. செலவு போக மிகுதி 351—8—9

அதில் ரூ. 150க்கு புத்தகங்கள் (கன்னட மொழி உள்ளிட்ட) வரவைத்து கழக நூல் நிலையத்தில் சேர்ப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

கொடுங்கையூர் தி. மு. கழகம்

2-10-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு மூலக்கடை திடலில் (லட்சுமி டாக்கீஸ் அருகில்) தோழர் மு. ராசன் தலைமையில் தி. மு. க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஊஞ்சில். கி. மனோகரன், தோழியர் சத்தியவாணி முத்து தோழர்கள் மு. கிருட்டிணமூர்த்தி, ஆடவழகன், மா. பொ. வேதாசலம் ஆகியோர் கழகக் கொள்கையினை விளக்கிப் பேசினார்.

இலங்கை

அண்ணா பகுத்தறிவு மன்றம்

இம்மன்றத்தின் தேர்தல் கூட்டம் 18—9—55-ல் மன்றப் பணிமனையில் தேர்தல் அதிகாரி திரு எம். உமர் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு வரவு—செலவு—கணக்கு பொருளாளர் திரு வி. ராமன் அவர்களால் வாசிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. நடப்பு வருடத்திற்கு கீழ்காணும் நிர்வாகிகள் ஏக மனதாக தெரிவு செய்தனர். தலைவர் திரு வை மு. அழகேசன் செயலாளர் திரு எம், எஸ், குமார் துணைச்செயலாளர் திரு தி. பரமசிவன் திருவாளர்கள் எம். உமர், கே, கே, தமிழ்நாதன் வி, மாதவன் எம். சின்னையா வெ, வெள்ளைச்சாமி டி, வி, நடராசன் கொள்கை குமரன் ஆகியோர்கள் உள்பட (11) பேர்கள் கொண்ட செற்குழு அமைக்கப்பட்டது,

புதிய நிர்வாகிகளின் நன்றியறிதலுடன் செயலாளர் எம், எஸ், குமார் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

18-வது வட்டம்

சென்னை 18-வது வட்ட தி. மு. கழக பணிமனையில் 2—10—55 காலை 10-மணிக்கு துணைச்செயலாளர் கே. சுப்பிரமணி தலைமையில் நிர்வாக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது அதுபோது கிளைக்கழக ஆறும் ஆண்டு விழா நடத்துவதெனவும் கூட்டத்திற்கான நிதியை வசூலிப்பதெனவும் ஆண்டு விழா கூட்டத்திற்கு அண்ணா அவர்களை வரவழைப்பது எனவும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது கழக ஆக்கவேலை குறித்து கழகத் தோழர்கள் ஆலோசனைக்குப் பின்னர் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

மீர்சாகிப்பேட்டை

தி. மு. கழக அனுதாபி ஏ. சண்முகம் அவர்களின் துணைவியார் திருமணம் புரிந்த சில திங்களுக்குள்ளாகவே விஷக்காய்ச்சல் காரணமாக 1-10-55ல் இயற்கை எய்தியமை கேட்டு வருந்துவதுடன் வாழ்க்கைத் துணைவியை இழந்து துயரக்கடலில் மூழ்கி இருக்கும் சண்முகத்திற்கும் அவரின் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரியபடுத்திக் கொள்கிறோம், என 43-வது வட்ட பொதுமக்கள் சுகாதார மன்றத் துணைத்தலைவர் ஈ. கே. முத்து அறிவிக்கிறார்.

வெள்ளவாவிப்புதூர்

தி. மு. கழக சார்பில் 23—9—55ல்

தோழர் ஆதித்தன் விடுதலையானார்

●

மாத்தூர் விவசாயிகளின் அறப்போரில் ஈடுபட்டு 144 தடையுத்திரவை மீறியதாக குற்றம் சாட்டி, சர்க்காரால் வழக்கு தொடரப்பட்டு, கடந்த இரண்டு வார காலமாக சென்னை சிறைச்சாலையில் 'சி' வகுப்பில் காவலில் வைக்கப்பட்டிருந்த "தினத்தந்தி" ஆசிரியர் தோழர் ஆதித்தன் அவர்கள் 2—10—55 அன்று நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். அதுமட்டுமல்லாமல் மாத்தூரில் விவசாயிகள் — தொழிலாளர்களுக் கிடையே ஏற்பட்டுள்ள தகராறை —நிலவருமான அமைச்சர் சமரசம் செய்து வைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

நாமக்கல் பஸ் தொழிலாளர்கள்.

●

நாமக்கல் ராமலிங்கம் பஸ் சர்வீஸ் மானேஜர் மீது குற்றச்சாட்டுகளைக் காட்டி அந்த பஸ் தொழிலாளர்கள் பொதுமக்களுக்கு அறிக்கைமூலம் தெரிவித்திருப்பதோடு மேற்படி பஸ்சர்வீஸ் உரிமையாளர் உடனடியாக இதனை கவனித்து ஆவன செய்யுமாறும் வேண்டியுள்ளனர்,

புலியகுளம்

அழகிரி மன்றம் சார்பில் 2—10—55 அன்று திராவிடத் தந்தை பெரியார் ஈ. வே. ரா,வின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு டி. கே. ஆறுமுகம் தலைமை வகித்தார். தோழர் கி. வீ, வரதராசு பெரியார் படத்தைத் திறந்து வைத்தார். அ. பழநிசாமி. ம, கிருஷ்ணன், கி. ஆ. குப்புராசு ஆகியோர் சொற்பெருக்காற்றினர்.

தேதி 7-வது புத்தாண்டுத் தொடக்க விழாவும் திராவிடநாடு பிரிவினை வாரமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கழக கொள்கைகளைவிளக்கும்சுவரொட்டிகள் பல ஒட்டப்பட்டு மாலையில் கொள்கை விளக்கக் கூட்டமும் நடத்தப்பட்டது. நா. பழனிச்சாமி அவர்களால் கழகக் கொடி ஏற்றப்பட்டு திருமலை அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது. சு. கிருட்டிணன், அ, சின்னப்பன், கு. கு. முத்துசாமி, ஆகியோர் கழகத்தின் வளர்ச்சி குறித்தும் கழகக் கொள்கைகளை விளக்கியும் சொற்பொழிவாற்றினர். நா. பழனியப்பன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

மேலூர் தி. மு. க,

மாநில மாநாட்டுக்கு நிதியளித்தனர்

*

செங்கற்பட்டுமாவட்டம் மேலூர் தி. மு. கழக சார்பில் 2—10—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு மண்ணடி திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் புனிதம் குணசீலன் தலைமை வகித்தார். கூட்டத் துவக்கத்திற்குமுன் நாகை இரா. சண்முகம் அவர்கள் இயக்கப் பாடல்களைப் பாடினுர்.

பின்னர் தோழர்கள் இராதா மணாளன், வி. எஸ். மணி, ஆ. கிருஷ்ணன் பி. எ. ஆகியோர் பேசியபின் கவிஞர் கண்ணதாசன் வடநாட்டிற்கும் திராவிடநாட்டிற்குமிடையேயுள்ள கலாச்சார வேறுபாடுகளை பற்றி விளக்கிப் பேசினுர்.

இறுதியாக துணைப் பொதுச்செயலாளர் என். வி, நடராசன் திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்திப் பேசினுர்,

பின்னர் மேலூர் தி. மு. கழக, சார்பில் கழகச் செயலாளர் அதனின் பங்கிட்டுத் தொகையை ரூபாய் 25-0-0 துணைப் பொதுச்செயலாளரிடம் அளித்தார், மேலூர் தி. மு. கழகத்தனரின் இம்முயற்சிக்கு துணைப்பொதுச் செயலாளர் நன்றி தெரிவித்தார். கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத் துவக்கத்திலிருந்தே சில காங்கிரஸ்காரர்கள் சற்று ஒதுங்கியிருந்துக் கொண்டு கூட்டத்தை நடத்தவொட்டாமல் குழப்பம் விளைவிக்க முயன்றனர். இறுதியாக ஒருவர் கூட்டத்திலேயே குழப்பம் செய்ய வந்தார். அவரை உடனே அமைதியாக வெளியேற்றப்பட்டது; கூட்டம் முடிந்து எல்லோரும் சென்ற பின் அவர்கள் கற்களை வீசி ஒலிபெருக்கிக்கு சேதாரம் விளைவித்தனர். உடனே கழகத் தோழர்கள் போலீஸ் அதிகாரிகளிடம் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்துள்ளனர்.

மதுரை

27-10-55-ல் நடைபெறும் மதுரை நகராண்மைக் கழகத் தேர்தலில் வாக்காளர்கள் யாவரும் தங்கள் 'வாக்கு'களைத் தவறாது நல்ல முறையில் வழங்க தொழிலாளர், வணிக ஊழியர், அரசாங்க ஊழியர், மாணவர் இன்னபிற பணி புரியும் யாவர்க்கும் 27-10-55ஐ பொது விடுமுறையாக விடுத்து, மக்களாட்சியின் மாண்பை வளர்க்க அரசியலார் ஆவன செய்யும்படி வேண்டுகின்றோம் என்ற தீர்மானத்தை மதுரை நகர் தி. மு. க. உட்கிளையான கோரிப்பாளையம் சிங்காரவேலர் நினைவுப் படிப்பகத்தார் மாநில முதலமைச்சருக்கும் மதுரை நகர அரசாங்கப் பொதுத் துறையலுவல் தலைவர்கட்கும் அனிப்பியுள்ளனர்.

வடாற்காடு மாவட்டத்தில்

மாநில மாநாட்டு

நிதி அளிப்பு கூட்டங்கள்

8-10-55 கவசம் பட்டு, 9-10-55 காலை வேலூர், மாலை திருப்பத்தூர் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், மாவட்ட செயலாளர் முல்லை. சத்தி அவர்களும் கலந்துக் கொள்வார்கள்.

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1

மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்,

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 108-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

நகரசபைத் தேர்தல் முடிவு

(சென்ற வாரத் தொடர்ச்சி......)

இரட்டைத் தொகுதிகள்

●

வட்டம் 17

(பொது)

எம். வரதராசலு (சு) — வெ
டி. கே. கண்ணப்பர் (கா)

(ரிசர்வ்)

தோழியர் தனபாய் (சு) — வெ
கமலாதேவி (சு)
ஆர். கே. ராசம்மாள் (கா)

18

(பொது)

எம். ஈ. கோவிந்தராசன் (சு) — வெ
ஜி. செல்வபதி செட்டியார் (கா)
எம். எ. அஜீஸ் (சு)

(ரிசர்வ்)

எ. சித்திரவேலு (சு) — வெ
வி. மூர்த்தி (கா) பி. ஜானகிராம், எஸ். முனுசாமி, வி. முனுசாமி, எஸ். எம். நாகபூஷணம், எம். ரத்தினம், பி. வெங்கடசுப்பையா (சு)

19

(பொது)

எஸ். பக்கிரிசாமிப்பிள்ளை எம். எல். எ. (சோ) — வெ
டி. ராசகோபால் (கா)
பவுரிலால் (சு)

(ரிசர்வ்)

கே. எம். சாமுண்டேசுவரன் (சோ) வெ
வி. ஆர். ராமச்சந்திரன் (கா)
எம். சோமசுந்தரம், பி. வி. வரதராசலு, கே. வி. பக்தவத்சலு (சுயேச்சை)

20

(பொது)

டி. ஆண்டியப்பன் (கா) — வெ
எம். கே லோகநாதன், சுப்ரமணியம் (சு)

(ரிசர்வ்)

ஆர். முனுசாமி, (கா) — வெ
தேவராசன் (சு)

33

(பொது)

ஜி. கிருஷ்ணன் (கா) — வெ
அப்துல் காதர், கே. முருகேசன் (சுயேச்சைகள்)

(ரிசர்வ்)

மாணிக்கவாசகம் (கா) — வெ
ஆர். அங்கேசன் (சு)

34

(பொது)

டி. பார்த்தசாரதி (கா) — வெ
ராமச்சந்திரன், கோவிந்தசாமி ராமன் (சுயேச்சைகள்)

(ரிசர்வ்)

கே. எம். நாதமுனி (கா) — வெ
எம். செயராமன் (சு)

40

(பொது)

கே. எஸ். ஏகாம்பரம் (கா) — வெ
சி. டி. சாரங்கபாணி (சு)

(ரிசர்வ்)

டி. எல். திரிபுரசுந்தரி (கா) — வெ
அலமேலு அப்பாதுரை [சு]
ஜெயலட்சுமி [சு]

45

(பொது)

சி. ஆர். ராமசாமி [கா] — வெ
வி. ஆர். ராதாகிருஷ்ணன் [பி. சோ]

(ரிசர்வ்)

டி. என். அனந்தநாயகி [கா] — வெ
விஜயலட்சுமி [பி. சோ.]

●

கேள்வி? பதில்.

— அஞ்சாநெஞ்சன் —

எம் வீரய்யா,
சுங்கைப்பட்டாணி, மலாயா

கே : [1] இருபதாம் நூற்றுண்டில் தமிழர்களுக்காக பாடுபடும் தனிப் பெருந்தலைவர் அண்ணுதுரையா—பெரியாரா ?

ப : ஒருவருக்கு இரு கண்கள் எப்படி முக்கியத்துவம் வாய்ந்ததோ அதுபோலவே தமிழர்களுக்கும் — பொதுவாக திராவிடத்திற்கும், பெரியார், அறிஞர் அண்ணு ஆகிய இருவரும் இரு கண்கள் போன்றவர்களாவர்,

கே: [2] திராவிட காமராசர் ஆட்சியில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை பெரியார் நடத்துவாரா ?

ப : ஏன்—இந்தியை எதிர்க்க கொடி எரிப்பு போராட்டம் நடத்த முனைந்தது உங்களுக்குத் தெரியாதோ!

கே: [3] மலாயாவிற்கு பெரியார் வந்திருந்த போது அண்ணுவைப் பற்றி கேட்ட கேள்விகளுக்கு நல்ல விதமாக பதில் அளித்த பெரியார், தமிழ் நாட்டில் மட்டும் அண்ணுவைத் தாக்கிப் பேசுகிறுராமே இது உண்மையா ?

ப : பெரியார் மலாயா வந்திருந்தபோது துரப்பிடித்த,காவெடுத்த "ஊசிகளை" தமக்குத் துணையாகக் கொள்ள வில்லையல்லவா!

*

ராமன், மதுரை.

கே : தோழமைக் கழகம் என்ருல் என்ன ?

ப : தோழரே தங்களின் கேள்வி மிக விசித்திரமா யிருக்கிறதே—பொதுப்பணியில் தோழமை உணர்ச்சியை வளர்ப்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றும் நிறுவனத்திற்கு தோழமைக்கழகம் என்று பெயர். இதில் ஐயப்பாட்டிற்கு ஒன்றும் இடமில்லையே.

*

பி. மாரிமுத்து தென்னிலை,

கே : அஞ்சா நெஞ்சனே உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன், விடை கண்டிப்பாய் இருக்க வேண்டும், அதாவது நான் முதலில் திராவிட கழகத்தில் சேர்ந்தேன், பெரியார் திருமணத்திற்குப்பிறகு தி.மு.க.வில் சேர்ந்தேன், இன்றுவரை ஆதரித்தும் வந்தேன். இப்போது பெரியார் கொடி எரிப்பு போராட்டத்தில் தி.மு.க. சேராததினுல் மிகவும் வருத்தமடைந்து மறுபடியும் தி. க. வில் சேரப்போகிறேன். உங்கள் அபிப்ராயம் என்ன ?

ப : நீங்கள் எதிலாவதுசேர்ந்து கொள்ளுங்கள். எனக்கு அதைப் பற்றிய கவலையில்லை. ஆனுல் பொதுப்பணியில் ஒரு கொள்கையை ஆதரிப்பதோ அதுசம்பந்தப்பட்ட கட்சியில் சேருவதோ என்பதற்கு முன்னதாக சற்று பகுத்தறிவு கொண்டு சிந்தித்து—நிதான புத்தியுடன் திடமான முடிவுக்கு வந்து அதற்கேற்ப ஒரு கொள்கையையோ — கட்சியையோ ஆதரிப்பதுதான் அறிவுடைமையாகும். அதைவிடுத்து 'அவசரசாமிகள்' மாடலில் ஆவேசபுத்தியுடன் நடப்பது ஒழுங்கல்ல. இனியாவது தாங்கள் சேருவது எந்தக் கட்சியானுலும் சற்று சொந்த புத்தியுடன் சிந்தித்து நடித்திருப்பீராக.

*

டி. ராஜகோபால். கோடம்பாக்கம்

கே : முன்பு சபா நாயகராகயிருந்த திருவாளர் சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்குப் பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தலில் தி. மு. கழக சார்பில் ஒருவரை நிறுத்தப் போவதாக பலமான பேச்சு இருக்கிறதே உண்மையா ?

ப. அரசியல் உலகில் சில பஜார் நியூஸ் பேர்வழிகள் இருப்பது இயற்கைதானே! இப்பேர்ப்பட்ட பேர்வழிகள் எத்தனைதரம் மூக்கறுபட்டாலும் திருந்துவதுமில்லை. அதுகளின் பிறவிக் குணமே அப்படி அமைந்துவிட்டது. ஆதலால் தான் 'மாநில மாநாட்டில் பொதுத்தேர்தலில் ஈடுபடுவதா இல்லையா என்று முடிவு செய்யப்படும்' என்று அண்ணு அவர்களும் தி. மு. கழகமும் திட்டவட்டமாக கூறியிருந்தும் தி. மு. கழகத்தின் பெயரை இந்த இடைத் தேர்தலில் சம்பந்தப்படுத்தி பிதற்றித் திரிகின்றனர் போலும் அப்பேர்வழிகள். எனவே அவ்வித செய்திகளில் உண்மையில்லை.

*

எ. டி. பதி, கொத்தமங்கலம்,

கே : செட்டிநாட்டில் ரூபாய் நோட்டுகளை எண்ணிப் பார்க்க முடியாமல் பீரோவில் அடுக்கி அடிக்கணக்கில் அளந்துதான் கணக்குப் பார்க்கிருர்கள் என்று ஒரு கம்யூனிஸ்ட் தோழர் கூட்டத்தில் சொன்னுர். இது உண்மையா ?

ப : அவ்விதம் நோட்டுகளை அடுக்கி வைக்கும் போதோ அல்லது அளந்து பார்க்கும்போதோ துணையாயிருந்து யான் அனுபவம் பெற்றதுமில்லை. அவ்வித துணையா யிருந்ததினுல் ஏற்படும் கோளாறுகளினுல் பிறகு அதை வெளியே கூறும் வித்தைகளும் எனக்குத் தெரியாது தோழரே.

கைத்தறி
ஆடையையே அணியுங்கள்

பம்பாயில்

திராவிடநாடு பிரிவினை நாள்

திராவிட நாடு பிரிவினைநாள் பொதுக்கூட்டம் 18—9—55 இரவு 7 மணியளவில் தி. மு. க. தாராவி கிளையின் சார்பில், குடியரசு நிலையத்தில் நடைபெற்றது. செயலாளர் தோழர் சி. த. மு. இரா. ஆரியசங்காரன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தோழர்கள் ம. இரா. ரெத்தினசாமி, என். எஸ். மாடசாமி, எஸ். தங்கையா, சு. தே இராசையா, மா. அண்ணுமலை, ந. நடராசையா, எஸ். தியாகராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இறுதியில் துணைச்செயலாளர் தோழர் சு. தங்கவேலன் நன்றியுரை நிகழ்த்திய பின் கூட்டம் முடிவுற்றது.

திருவள்ளுவர் கலா மன்றம்

ப. தி. வ. கலாமன்ற உறுப்பினர் கூட்டம் 24—9—55 சனி இரவு மணிக்கு தாராவி ரகிம்சேட் சால் பின்புறம் அமைக்கப்பட்ட பந்தலில் தோழர் பெ. சு. கலைச்செல்வன் தலைமையின் கீழ் தோழர் எஸ். சிவசங்கரநாதன் இன்னிசையுடன் துவங்கியது.

தாயகம் சென்று திரும்பிய தோழர் எம் கருணுகரன் அவர்களை பாராட்டி வி. எ. ஆறுமுகப்பெருமாள், யு. எஸ். செல்லையா பேசியபின் தோழர் எஸ். மகராசன் கைத்தறித்துண்டு அணிவித்துப் பாராட்டிப் பேசினுர். வருகிற 'ஒளி' பொது விடுமுறையின் போது தோழர் நெல்லை இரா. இளவழுதி தீட்டிய 'காதல் பசி' 'பலிபீடம் நோக்கி" இரு நாடகங்களை நடத்துவதென முடிவெடுக்கப்பட்டு 17–4–55–ல் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு கலைக்கப்பட்டு புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர் ஏ. பி. ஏசுதாசன் செயலாளர் உ. அ. செல்லையா, துணைச் செயலாளர் கே. கே. சீனிவாசன், பொருளாளர் பெ. சு. கலைச்செல்வன், மற்றும் 9 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

ஆமதாபாத்

25—9—55 மாலை 4–30 மணிக்கு ஆ. ந. தி மு. கழகத்தின் சார்பாக திராவிடநாட்டுப் பிரிவினை வாரமும், மாநில மாநாட்டு நிதி அளிப்பு விழாவும் தோழர் டி. வி. பாலகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. பெரியசாமி வரவேற்புரை நிகழ்த்தினுர். பிறகு ஆ. முத்தமிழ் நாடக மன்றத்தாரின் 'யார் குற்றவாளி!' எனும் நாடகம் நடைபெற்றது. நாடகத்தில் பங்குகொண்ட நடிக தோழர்கள் ர. ச. வேலாயுதன், ப. பாண்டியன், வெ. அருளப்பன், கெ. வெண்ணிலா கெ. வாசு, ஆர் டி. அசலம், கலைமணி, ஆகியோர்கள் அவரவர்கள் பாத்திரத்தை பொருத்தனமான முறையிலும் பொது மக்கள் பாராட்டும் வகையில் திறம்பட நடித்தார்கள்.

தொடர்ந்து நரோடா வட்ட மாணவத் தோழர்கள் கெ. ராசகோபால் ந. நமணி இருவரும் 'என் நாட்டுப் பிரிவினை வேண்டும்' என்பதைப் பற்றி சொற்பொழிவாற்றியபின் மன்ற பயிற்சியாளர் சு. நரசிம்மன் அவர்கள் உருவாக்கிய நகைச்சுவை பாகத்தில் பங்குகொண்ட தோழர்கள் மு. தனபால் வி. எஸ் கே. சாமி, (துரோபதை துயிலுரித்தல்) எனும் கட்டத்தை தெருக்கூத்துபாணியில் நகைச்சுவை முறையில் மக்கள் சிந்தித்து உணரும் வகையில் நடித்துக் காட்டினுர்கள்.

பின்னர் நாடக மன்ற செயலாளர் கலைமணி அவர்கள் நன்றி நவில நாடகம் இனிது முடிவுற்றது. மேலும் இசைக் குழுவில் பங்கேற்ற தோழர்கள் மா. சீதாராமன், கே. வாசு, ஆர். பி. சுந்தரம் பயிற்சியாளர் சு. நரசிம்மன் அரங்கமைப்பாளர், சி. என். முருகன், வி. சின்னையா வாத்தியார் ஆகியோர் தங்களின் பணியை திறம்பட நடத்தினர். உண்டியல் மூலம் ரூபாய் 5–9–2 வசூலிக்கப்பட்டது.

பஞ்சாபில் மூன்று நாட்கள்

பிகாரிலால் வழங்கிய பரிசுகள்.

பிகாரிலால் இல்லத்து மச்சிப்படிகளை ஏறிய வாறே இந்த மச்சி வீடு உங்களுடைய சொந்தவீடா அல்லது வாடகை வீடா என்று பிகாரிலாலைக் கேட்டேன்,

எனது சொந்த வீடு, நிலபுலன்களெல்லாம், அமிருதசரசில் இருக்கிறது, ஹோஷியார்பூரிலுள்ள இந்த வீடு நான் வாடகைக்கு அமைத்துக் கொண்ட விடுதான், வாடகை மாதம் ஐம்பது ரூபாய் என பதிலிறுத்தினர்.

மச்சிப் படிகளைக் கடந்து இல்லம் நுழைந்ததும் பிகாரிலாலின் இரு அருமைப் புதல்விகள் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்ணுற்ற நான் அவ்விரு பெண் குழந்தைகளும் தங்களுடையனவா! 'தும்பி—தூவாட்டி' ஆட்டம் அழகுபட ஆடுகிறார்களே என்று மகிழ்ந்துரை பகன்றேன்,

என்ன சொன்னீர்கள் 'தும்பி—தூவாட்டியா? அப்படியென்றால்...? விளக்கவுரை கேட்டார் பிகாரிலால்.

இந்த உங்கள் குழந்தைகள் ஆடும் ஆட்டத்தை எங்கள் தமிழ் நாட்டில் 'தும்பி—தூவாட்டி' என்று கூறுவோம் என்றேன்.

அதற்கு அவர் எங்கள் பகுதிகளில் இதைக் 'கிக்லி' ஆட்டம் என்றழைப்போம் என்றார்.

ஆட்டத்தை நிறுத்திக் கொண்ட குழந்தைகள் எனது புது முகத்தைக் கண்டு ஆச்சரியமும் அச்சமும் கலந்த பாவனையில் தந்தை பிகாரிலால் பக்கம் வந்து நின்று என்னையே உற்றுப் பார்த்தன.

சற்று நேரத்தில் பிகாரிலால் மனைவியாரும் பிகாரிலாலின் வயது முதிர்ந்த—அதாவது மைசூர் ஸர். எம். விஸ்வேசுவரய்யா அக்காள் என்று வயதைப் பொறுத்தவரைக் கொள்ளத்தக்க—நரைமூதாட்டி குடுகுடு பாட்டியும் மற்ற அவரது புதல்வர்களும் வந்து சூழ்ந்து கொண்டார்கள்,

என்னை அக்குழந்தைகளுக்கும், மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தவான் வேண்டி 'அவர் நமது பாபுஜியின் உற்ற நண்பர்! 'மத்ராஸி அண்ணன்' இன்றைய நமது விருந்தாளி' என்று கூறி—குழந்தைகளை நமஸ்தே செய்யச் சொன்னார்.

குழந்தைகளுடன் அவரது குடும்பமே சேர்ந்து நமஸ்தே தெரிவித்தார்கள். மகிழ்வும், நன்றியுங் கலந்த எனது பதில் நமஸ்தேயும் வழங்கினேன்.

அமர்ந்தோம். அப்பா பிகாரிலால் ஜீ! என்னை 'மத்ராஸி' அண்ணன் என்று அறிமுகப்படுத்தினீர்கள். ஆனால் அந்த 'மத்ராஸி' என்றச் சொல்லில் பொருட் செறிவு இல்லை. தென்னாட்டில் இருப்பவர்கள் எல்லோரையும், வடநாட்டிலுள்ள உங்களைப் போன்றோர் அனைவருமே மத்ராஸி என்றுதான் அழைக்கிறீர்கள். அது சரியன்று. தமிழ் நாட்டிலிருந்து வருபவர் தமிழர். தெலுங்கு அல்லது ஆந்திர நாட்டிலிருந்து வருபவர் தெலுங்கர் அல்லது ஆந்திரர் மலையாள நாட்டிலிருந்து வருபவர் மலையாளி கன்னட நாட்டிலிருந்து வருபவர் கன்னடியர், இவர்கள் நான்கு பகுதியினரையும் ஒருங்கு சேர்த்து ஒரு பொதுமொழியால் அழைக்க வேண்டுமெனின் 'திராவிடர்கள்,' என்றுதான் அழைக்க வேண்டுமே யல்லாது 'மத்ராஸி' என்று அழைப்பதில் அர்த்தக் குறைவு என்று தெளிவுரைப் பகன்றேன்.

அதைக்கேட்ட பிகாரிலால் அப்போது தங்களை என்னவென்று அழைக்க வேண்டுமென்றார்.

பொதுவாகத் திராவிடர் என்றழையுங்கள் அல்லது குறிப்பாகத் தமிழர் என்றழையுங்கள் என்றேன்.

தமிழின் தனிச் சிறப்பு வாய்ந்த 'ழ' கரம் பிகாரிலால் வாயில் நுழைவதாகக் காணப்படவேயில்லை, தமிழர் என்று சொல்லப் புகுந்த அவர் டமிலர், டமளர், தமிளன் என்றுதான் சொல்ல வந்ததே யொழியத் தமிழர் என்ற தூய உச்சரிப்பு வரவேயில்லை! அவர் படும் வேதனை சகியாது வேண்டாம் விடுங்கள் திராவிடர் என்று சொல்லுங்கள் அதுவே மிகச் சிறந்தது என்றேன்!

அதிலிருந்து அவர் என்னை திராவிடத் திர்வேடம் என்றுதான் அழைக்கத் தலைப்பட்டார். மத்ராஸி பட்டம் விரட்டியடிக்கப்பட்டது.

இங்கே மற்றொரு நிகழ்ச்சியையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

சந்த்ராம் அய்யாவிற்குக் கூட 'ழ' கரம் நுழைய மறுத்தே விட்டது! திராவிடர் கழகம் என்றேன்! அவர் தராவிடர் கஜகம், கஷ்கம், கசகம் கஷகம், என்றேதான் கூற முடிந்தது! அவர் வீட்டில்அன்று 'ழ'கர பாடம் ஆரம்பித்தேன், நான் ழ, ழ, ழ, ழ, என்று குழைந்துரைக்கின்றேன்! சந்த்ராம், சுந்தர்பாய் பாட்டி, ஹேத்ராம் தேவ்ராஜ், அருண்குமார், மற்றும் அங்கு சூழ்ந்திருந்த அத்தனை பேரும் ஜ ஜ என்றார் ஒருவர், ஷ ஷ என்றார் மற்றொருவர், ஷ, ஷ என்றார் பிறிதொருவர், ஸ ஸ என்றார்கள் ஏனையோரும். ஐயகோ ஒருவர் கூட 'ழ'கர பாடத்தில் தேறவில்லை—எல்லோரும் கிடெயில் ஆய்விட்டீர்கள் என்றேன்! ஒரே சிரிப்புதான்! சரி! திராவிடர் கழகத்தை உங்களது போக்கிலேயே 'ஜாத்-பாத்-தோடக்-மண்டல்' என்கிறதைப் போலவே திராவிட மண்டல் என்றழையுங்கள் என்று அவர்களை கேட்டுக் கொண்டேன். நிற்க:

ஐந்து வயதையும் எட்டிப் பிடிக்காத பிகாரிலாலது அழகுச் செல்வி ரீட்டா எனது உள்ளத்தை மிகவும் கவர்ந்துவிட்டது. ரீட்டா அழகுச் செல்வியின் சாயலில் என்னை விட்டுப் பிரிந்து மறைந்திட்ட எனதருமைத் தங்கையின் சாயலைக் கண்டேனாகையால் அந்த ரீடாவின் மீது உள்ளம் நெகிழ்ந்துவிட்டது. அதனுடன் பேசவேண்டுமே! பாழும் இந்தி குறுக்கிட்டது. பேசினேன் எனது கைக்கடிகாரத்தைக் காட்டி அப் கித்னா பஜே? என்றேன். பாரஹ் பஜே! என்றது குழந்தை ரீட்டா! அச்சா! அச்சா!

'திருவேடம்'

கியா தும் ஸ்கூல் ஜாதி ஹோ? என்று கேட்டேன். ஜீ! ஹாங்! என்ற பதில் வந்தது! கித்னா கிளாஸ் படிதி ஹோ? என்றேன். பஹ்லி! என்ற பதில்! பானீ லாவோ! என்று கேட்டேன். கியா தண்டா பானீ, யா கரம் பானீ? என்ற கேள்வியைப் போட்டது குழந்தை ரீட்டா! கரம் பானீ என்றேன். அதற்குள் அருகிருந்த அதனது அக்காள், ஆறுவயதைக் கடந்தது ஒரே ஓட்டமாய் ஓடி ஒரு டம்ளர் வெந்நீர் கொண்டுவந்து என்னிடம் நீட்டிவிட்டது, ஆ! ஊர்மிளா எப்படி வெந்நீர் கொண்டு வரலாம்! என்னைத்தானே அண்ணன் வெந்நீர் கேட்டது! ஒரே சண்டை அக்காளுக்கும் தங்கைக்கும்! ஊர்மிளா ரீட்டாவைத் தள்ள, ரீட்டா ஊர்மிளாவை அடிக்க ஒரே போர்! சண்டையை விலக்கி ரீட்டாவை வேறு டம்ளர் தண்ணீர் கொண்டு வரச் சொல் குடித்த பிறகுதான் ஓய்ந்தது சண்டை! அக்காளுக்கும் தங்கைக்கும், அண்ணனுக்கும் தம்பிக்கும் எவ்வளவு ஒற்றுமை என்பது எனது பால்ய வயது அனுபவங்களை நினைத்தே அத்தகு சண்டை சாதாரணந்தான் எனச் சமாதானங் கொண்டேன், எங்களது இந்தத் தகராறை பிகாரிலால் குடும்பமே வேடிக்கை பார்த்து மகிழ்ந்தார்கள்! பூரித்தார்கள்!

எனக்கு இந்த குழந்தைகளின் மீதுள்ள பாசத்தையும் அக்குழந்தைகள் என்னைப் பார்த்தச் சடுதியிலேயே மேலே விழுந்து குழைந்து விளையாடுங் காட்சியினையுங் கண்ணுற்று மெச்சி மகிழ்ந்த பிகாரிலால் குழந்தைகளின் உருவப் படமொன்றை உடன் கொணர்ந்து வழங்கினர்! (படம் அடுத்து வெளிவரும்.)

பிகாரிலாலின் தாயார் 95 வயதையுங் கடந்து தளர்ந்து விழுந்து விடாமல் குடு குடு என்று ஓடிக் கொண்டும், ஆடிக் கொண்டுமிருக்கிறார்களே என்பதில் எனக்கு அப் பாட்டியின் மீது ஒரு அபிமானம்!

அப்பாட்டி என்னிடம் ஆசையோடும் ஆவலோடும் பேசிற்று! உங்கள் பக்கங்களில் நல்ல நல்ல புடவைகள் கிடைக்குமாமே! இன்னொரு முறைத் தாங்கள் வரும் போது வாங்கி வருகிறீர்களா. என்று அன்புடன் கேட்டது! ஆகா! கண்டிப்பாய் வாங்கி வருகிறேன்! உங்களது நூறாண்டு பிறந்த தினவிழாவிற்கு வந்து புடவை பரிசளிக்கிறேன் என்றேன் பொக்கவாய் சிரிப்பு சிரித்தது கிழவி. அவரது சிரிப்பில் எனது உள்ளந்தோய்ந்தவனானேன்! பாட்டி இந்தியில் பேசியதையும் நான் ஆங்கிலத்தில் பதிலுரைத்ததையும் பிகாரிலால் முறையே ஆங்கிலத்திலும், இந்தியிலும் மொழி பெயர்த்துச் சொல்லி எங்களது உரையாடலுக்கு ஊக்கமளித்தார், மகிழ்ச்சி நிறைந்த உரையாடலாயிற்று!

சரி! திர்வேடம் சாப்பிடலாமா! என்று எழுந்தார் பிகாரிலால்.

'டின்னர் தயார்!' டேபிள்—சர்வீஸ் எழில் மிகு பீங்கான் 'தட்டுகள்! ஸ்பூன் — ஃபோர்க்' மேலை நாட்டு முறைப்படி விருந்தளிப்பு!

என்ன! என்ன நினைக்கிறீர்கள்—என்று கேட்டார் பிகாரிலால்,

இல்லை! நான் தற்போது தங்கள் இல்லத்தில் இருந்தாலும் இவ்விருந்தை நினையுறுங்கால், நான் சென்னையில் ஸ்பென்ஸர் ஹோட்டலில் இருப்பதாகவே நினைவு கொள்ளத் தோன்றுகிறது! —என்றேன்,

அந்த எனது பதில் பிகாரிலாலுக்கு மகிழ்ச்சியும் மதிப்பையும் ஊட்டிற்று என்பதை அவரது முகத்தோற்ற அசைவுகளில் கண்ணுற்றேன்.

வெண்மையான புலவு அரிசி சோறு! விலையுயர்ந்த மீன் கொண்டு காய்ச்சிய குழம்பு! மிளகுத் தூள், உப்பு தூவிய 'ஹாஃப்—பாயில்டு' கோழி முட்டை! பருகக் கனிச்சாறு கண்ணாடி டம்ளரில் 'மட்டன்—கட்லெட்'! ஆரஞ்சு பழங்கள்! போதாதோ அவை!—எனத்தான் எண்ணினேன் அப்போது! 'பப்பாட்' சாப்பிடுவீர்களா! ஓ! அதுவா! அப்பளம்! ஆனைக்குச் சோளப் பொறிபோல் ஆளுக்கு அப்பளம்! மென்று தூள் ஆக்கித் தள்ளி வைத்தேன்!

முடிந்தது டின்னர்! பிகாரிலால் என் மீது கொண்ட பாசமும் அவரது உள்ளமும் அவரளித்த அந்த விருந்தில் கண்ணாடி என விளங்கிற்று.

ரேடியோ திருப்பினர், இதயத்தை எட்டிப் பிடிக்கும் கீதம்! ரசித்தேன்! அந்த ரசிப்பிற்குத் துணையாக 'நேவிகட்' சிகரெட் 'டின்' எதிரில் வைத்து விட்டார். அமைதி! ஆனந்தம் !

உண்ட களைப்பு தீர்ந்ததும் ஹோஷியார்பூர் மாட்சிதனைப் பருகக் கிளம்பினோம். கண்டேன்! களித்தேன்! (9—9—55) திராவிடன் இதழிலேயே ஹோஷியார்பூர் மாட்சி! அளிக்கப்பட்டுவிட்டது.)

சந்த்ராம் அய்யாவிற்கு நன்கு பழக்கமான ஒருவரது கடைக்கு (சைனா ஷாப்) அழைத்துச் சென்று என்னை அறிமுகப்படுத்தினர். சென்னைக் கோடியிலுள்ள நான் சந்த்ராம் அய்யாவிற்கு அறிமுகமாய்விட்டேன் என்பது அறிந்து மகிழ்ச்சி கொண்டார் அக்கடைக்காரர். அவர் பற்பல குளிர்மைக் கண்ணாடிகள் விற்பனைக்கு வைத்திருந்தார். அதில் ஒன்றை எடுத்து பிகாரிலால் ஜீ! இது எனக்கு வேண்டும்! என்ன விலை கேளுங்கள் என்றேன். அதற்குள் அக்கடைக்காரர் விலை வேண்டாம் அன்பளிப்பாக இருக்கட்டுமென்றார். நான் ஒப்பவில்லை. பத்து ரூபாய் கொடுத்தேன். வாதங்களுக்குப் பிறகு வாங்கிய பத்து ரூபாயில் இரண்டு ரூபாய் மிச்சம் கொடுத்துவிட்டார் கடைக்காரர். ஆக எட்டு ரூபாயிற்கு வாழ்க்கையில் முதல்முதலாக பஞ்சாபில் 'கூலிங்-கிளாஸ்' வாங்கினேன்.

அதை விட்டு, சித்திரச் செதுக்கும் மரவேலை தொழிற்சாலைகளில் நுழைந்து நுழைந்து வெளி வந்து கடைத் தெரு பூராவும் சுற்றிக் காண்பித்தார் பிகாரிலால். அப்படிப் பார்த்த மூன்று இடங்களில் மூன்று பொருள்களை வாங்கி எனக்கு பஞ்சாப் நினைவின் அன்பளிப்பாக அளித்து மகிழ்ந்தார்,—பிகாரிலால்!

பாம்பறியும் பாம்பின் கால் என்ற படி, அவர் ஒரு பெரிய புகைக்குடியர் ஆனதால் எனது புகைக் குடிப்பித்தை நன்குணர்ந்தவராய், எனக்கு சிகரெட்டைச் செருகிப் பிடிக்கும் தந்த உறிஞ்சுக்குழாய் ஒன்றை வாங்கிக் கொடுத்தார். அது சித்திரச் செதுக்கு வேலையால் யானை உருவம் தீட்டப்பட்ட 'ஸ்பிரிங் ஆக்‌ஷன்' உள்ள தந்தக் குழாய்!

இரண்டாவதாக ஒரு பெட்டி. அருமையான தந்தப் பொடிகள் அமைத்து சித்திரக் கோலத்துடன் திகழ்கிறது. அதில் பத்து சிகரெட்டுகளையும், நாற்பது தீக் குச்சிகளையும் உள்ளே போட்டு விடலாம், பெட்டிற்கு திறந்து மூட மேல் மூடி கிடையாது. அப் பெட்டியின் மேல் பாகத்தை தூக்கினால் சற்று மேலெழும்பும். அதுபோதுதான் பத்து சிகரெட்டுகளையும் தீக்குச்சிகளையும் உள்ளிட வேண்டும் பிறகு எழும்பிய மேல் பாகத்தை விட்டுவிட்டால் பெட்டியில் அடங்கி விடும். உள்ளிருப்பவை வெளியே தெரியா தீக்குச்சியை உறைத்துப் பற்ற வைக்கும் தீ மருந்து பட்டையைச் செருக ஒரு கீற்றுச் சந்து இருக்கிறது, அதில் பட்டையைச் செருகி விடலாம். இப்போது ஒரு சிகரெட் பிடிக்க வேண்டுமானால் அப்பெட்டியின் மேல்பாகத்தைச் சற்று

பஞ்சாபில் மூன்று . . . தொடர்ச்சி

எழுப்பி கீழிறுத்தினால், சிகரெட் அளவிற்கும், தீக்குச்சி அளவிற்கும் வெட்டப்பட்ட சந்துகளின் வழியாக பெட்டியின் மேல் ஒரு சிகரெட்டும், ஒரு தீக்குச்சியும் வந்து நிற்கும். அச்சிகரெட்டை வாயில் வைத்து அக்குச்சியை எடுத்து பெட்டியில் செருகி வைத்துள்ள பட்டையில் தீட்டி சிகரெட் பற்ற வைத்துப் பிடிக்கலாம். இப்பெட்டியை எனது நண்பர்கள் பலருக்குக் காண்பிக்க அவர்களது வியப்பை அள்ளிக் கொள்ளும் வண்ணம் அமைந்திருக்கிறது. அதன் வேலைப்பாட்டுத் திறனே திறன்! அதை வாங்கி எனக்கு அன்பளிப்பாக அளித்த பிகாரிலாவின் அன்பே அன்பு!

மூன்றாவதாக ஒரு நகைப் பெட்டி! உள்ளே வெல்வட் துணி பொருத்தி அமைத்தது, வெளியே அருமையான—கண்ணையும் கருத்தையுங் கவரும் சித்திர வேலைப்பாடு! அழகுப் பெட்டி! விலைதான் என்னவோ!

அன்பளிப்புகள் முடிந்தன! அடுத்து சிங் பிரதர்ஸ் லிமிடெட், ஹோஷியார்பூர்!— ஃபோட்டோ ஸ்டுடியோ!—நுழைந்தோம்! ஃபுல்சைஸ் பிளேட், லோடு—செய்யச் சொல்லி போட்டோ பிடிப்பவரை அழைத்துக் கொண்டு ஒரு காரில் ஏறினோம். நேரே தக்கர்தாஸ் ஆபீஸ் வந்தோம். அவரும் தயாராக இருந்தார். அதே காரில் ஏறிக்கொண்டார். புரானி பாஸீ பறக்கிறது கார். வழியில் மேடு, பள்ளம், சேறு தண்ணீர் எல்லாம் காரின் வேகத்தைத் தடுக்கிறது. காரின் உள்ளே எங்களைத் தூக்கித் தூக்கிப் போட்டுக் குலுக்குகிறது. பொழுது சாயாமுன்னமேயே சந்த்ராம் இல்லம் சேர்ந்துவிட்டோம்.

ஹல்லோ திர்வேடம்! We were deserted so far by your separation! (இதுகாறும் உன்னைப் பிரிந்து, பாலைவனத்தில் உள்ளவர்களைப் போலானோம்.)—என்றார் சந்த்ராம்!

நானே நான் உங்களை விட்டுப் பிரிந்துவிட்டால்...! என்றேன்.

அதிலிருந்து எனது இல்லமும் உள்ளமும் நிரந்தரப் பாலைவனமேதான் சந்தேகமில்லை! என்றார் சந்த்ராம்.

அதோடு: You have left an indelible memory on the minds of all who come in contact with you here!

(இங்கே உங்களோடு பழகினவர்களின் நினைவில் தாங்கள் ஆழப் பதிந்துவிட்டீர்கள்.)

Your sweet and loving nature has made you dear to every one here!

(தங்களிடம் மண்டிக் கிடக்கும் கனிவான அன்பான தன்மையால் இங்குள்ளாரின் உள்ளங்களைக் கவர்ந்து கொண்டு விட்டீர்கள்.)

I cannot help praising you for your command over the English language, and your art of writing!

(தாங்கள் ஆங்கிலத்தை ஆட்கொண்டுவிட்டதையும், எழுதும் ஆற்றலையும் என்னால் போற்றாமலிருக்க முடியாது.) என்று உருகினார் சந்த்ராம்!

சரி! என்ன 'சிங்பிரதரை' கையோடு கூட்டி வந்திருக்கிறீர்கள்—என்று ஆச்சரியத்துடன் வினவினார் சந்த்ராம்.

உங்களைப் போட்டோவில் பிடித்து கண்ணாடிக்குள் போட்டுப் பூட்டவே 'சிங் பிரதரை' அழைத்து வந்தோம் என்றேன்.

இது யார் ஏற்பாடு? பணச் செலவு ஆகுமே! அது யாருடையது! என்றெல்லாம் கேட்டார்.

எல்லாம் எனது ஏற்பாடுதான்! இதற்கு உண்டாகும் இருபத்தைந்து ரூபாய் செலவும் என்னுடையதுதான் என்று சொன்னால் சந்த்ராம் தாளமாட்டார் எனக் கருதியேதான் எல்லாம் நம் பிகாரிலால்ஜீ ஏற்பாடு என்று ஒரு போடுபோட்டேன்.

அது ஏனோ சந்த்ராம் அய்யாவிற்கும், ஹேமந்ராம் அவர்களுக்கும் எனது பணம் செலவழிகிறதென்றால் அவ்வளவு ஏக்கம்! கவலை! அதுபோது அவர்கள் என்னை எவ்வளவு கவலையோடு நேசிக்கிறார்கள் என்பதனை நினைந்து நினைந்து உருகுவேன்! மகிழ்வேன்!

போட்டோ சந்த்ராம் இல்லத்தின் மாடியிலேயே இடமிருந்து வலமாக—பிகாரிலால் நான் சந்த்ராம் அவர் மனைவி சுந்தர்பாய், சுந்தர்பாய் மடியில் ஒன்றுவிட்டப் பேரப்பிள்ளை, தக்கர்தாஸ்—நாற்காலியில் அமர—எடுத்துக் கொண்டோம். அப்போட்டோவை ஒரு சில காரணங்களால் திராவிடனில் வெளியிட நான் விரும்பவில்லை. எனது போட்டோவை விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பமின்மையே இதற்கு முதற் காரணமென்க. போட்டோ எடுத்து முடிந்ததும் என்னைத் தவிர மற்ற உடன் வந்த பிகாரிலால், தக்கர்தாஸ், 'சிங் பிரதர்' ஆகியோர் சந்த்ராமிடம் சிறிது நேரம் அளவளாவி விட்டு விடைபெற்று வந்த காரிலேயே திரும்பினார்கள்.

இருட்டியும் விட்டது. இரவு உண்டி சந்த்ராம் இல்லத்தில் அருந்திவிட்டு, ஹோஷியார்பூர் பஜாரி விருந்து ஹேத்ராம் வந்ததும் வழக்கம்போல் அவரில்லத்தில் உறங்கினேன். பஞ்சாபில் இரண்டாம் நாள் கழிந்தது. பொழுது புலர்ந்தது. பஞ்சாபில் மூன்றாம் நாள் மலர்ந்தது! அது அடுத்து.

●

இலங்கை

இலங்கை தி. மு கழக கொள்ளுப்பட்டிக் கிளையின் செயற் குழுக் கூட்டம் கடந்த 26—9—55 கழக மண்டபத்தில் செயலாளர் இரா. ச. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கழக ஆண்டு விழாவில் கலந்துகொள்ள ஒப்புதல் கொடுத்து திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அனுப்பிய அஞ்சல், துணைச்செயலாளர் சாமிதாசன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

கழக ஆண்டு விழாவிற்கு இ. தி. மு க. பொதுச்செயலாளர் இரா. அதிமணி, 'சுதந்திரன்' ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், கலாநிதி, சு. வித்தியானந்தம், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, செல்வி தவமணிதேவி, பதுளை சாமி, சிங்களத் தோழர் தலுவத்தை ஆகியவர்களை அழைக்க தீர்மானிக்கப்பட்டது.

உறுப்பினர் கூட்டம் 8—10—55-ல் நடாத்த முடிவு செய்தபின் துணைச் செயலாளர் சாமிதாசன் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

*

முத்தமிழ் மன்றம்

75/4 சிந்தம்பிட்டித் தெருவிலுள்ள முத்தமிழ் மன்றத்தின் சார்பில் மன்ற பணிமனையில் 19-9-55 அன்று காலை 10 மணியளவில் திரு ஜே. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் பாரதியார் விழா கொண்டாடப்பட்டது. அவ்வமயம் எஸ். தியாகராசன் பாரதியின் பாடல் பாடிய பின்னர் திருவாளர்கள் கெ. ஜி பாலன், தி. இளங்கதிர், பி. எம். ஜலால், (அழகிரி மன்றம்) சுப்பையா, (அண்ணா பகுத்தறிவு மன்றம்) தமிழ் நாதன், (இ. தி மு க. கொழும்புக்கிளை) பா. ச. கீதம் 'நண்பன்' ஆசிரியர் டி. எம். பீர்முகம்மது ஆகியோர் பேசிய பின்னர் இ. தி மு. க. பொதுச்செயலாளர், இரா அதிமணி அவர்கள் படத்தைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினார். அடுத்து 'பம்பாய் முரசு' ஆசிரியர் தொல்காப்பியர் பேசினார். இறுதியில் துணைச் செயலாளர் எல். தர்மதாசன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

நெல்லிக்குப்பம்

26—9—55 இரவு 7 மணியளவில் வள்ளுவர் மன்றத்தின் பொதுக்குழு கூடியது. கீழ்க்கண்டவர்கள் வரும் 5-ம் ஆண்டிற்கு நிர்வாகக் குழுவினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

தலைவர் : திரு. என், இராபர்ட் பி. எ. எல். டி.
துணைத் தலைவர் : எஸ். ஜி சீனுவாசன் பி.எ.பி.எல்.
செயலாளர் : மு. சுப்ரமணியம்
துணைச் செயலாளர் : வெ, நாகராஜன்
பொருளாளர் : கே. பத்மநாபன்

மற்றும் அ. வெங்கடபதி, ஜெ எ.வடிவேலு, ஆர். தேவநாதன், எ. பக்கிரிசாமி, டி. கண்ணன், டி.என். ஜெய்னுத்தீன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்கள்.

வடாற்காடு மாவட்ட தி. மு. க. கிளைக் கழக செயலாளர்களுக்கு

●

வேலூர் வட்டத்தில் தோழர் கருத்தோவியன்—வாணியம்பாடி வட்டத்தில் தோழர் எ. எல். முனிரத்னம், திருப்பத்தூர் வட்டத்தில் தோழர்கள் எம். நடேசம், க. நெடுஞ்சோழன், திருவண்ணாமலை வட்டத்தில் தோழர் ப. உ. சண்முகம், செங்கம் வட்டத்தில் தோழர் எஸ் என். ராஜன், போளூர் வட்டத்தில் தோழர் போளூர் சுப்ரமணியம், ஆரணி வட்டத்தில் தோழர் கன்னையன், ஆற்காடு வட்டத்தில் தோழர் ஏ. கே. வில்வம், மற்றவட்டங்களில் மாவட்டச் செயலாளர் ஆகியோர் மாநில மாநாட்டுக்கு நிதி வசூலிக்க சுற்றுப்பயணம் செய்வார்கள். கிளைக் கழக செயலாளர்கள் அன்பு கூர்ந்து அவர்களிடம் நிதியை அளித்து மாவட்டத்தின் பங்கை நிறைவு செய்ய வேண்டுகிறேன்.

முல்லை. சத்தி

வ, ஆ. மாவட்ட தி. மு க. செயலாளர்

மாநிலம்

வட ஆற்காடு மாவட்ட அடிஷனல் மாஜிஸ்ரேட்டிடம் (வேலூரில்) வாணியம்பாடி பிர்கா விவசாயிகள் சங்கக் காரியதரிசி வி.என். தத்தப்பன் 'மாநிலம்' என்ற பெயரில் பத்திரிகை வெளியிடுபவராகவும் ஆசிரியராகவும் எம். எ. ஆபீத் அச்சடிப்பவராகவும் பதிவு செய்துகொண்டனர்.

மாயூரத்தில் பொதுச்செயலாளர்

மாயூரத்தில் 21-9-55 புதன் அன்று பொதுச் செயலாளர் வரவேற்பும் திராவிட நாடு பிரிவினை நாளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நகரெங்கும் இலட்சிய முழக்கத்தை ஏந்திய வளைவுகளும்-தோரணங்களும் கட்டப்பட்டு விழாக் கோலம் பூண்டிருந்தது.

காலை 8–30 மணிக்கு ரயிலடியில் பொதுச்செயலாளரை வரவேற்பதற்காக கழகத் தோழர்களும் பொதுமக்களும் திரண்டிருந்தனர். பொதுச்செயலாளர் வண்டியிலிருந்து இறங்கியதும் நகர செயலாளர் என் கிட்டப்பா மாலைசூட்டி வரவேற்றார். பின்னர் முசாபரி பங்களாவிற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

காலை 11-மணிக்கு பொதுச்செயலாளர் அவர்கள் தென்பகுதி இரயில்வே மென்யூனியன் மாயூரம் கிளைச் சங்க நிர்வாகிகளுக்கு பேட்டிதந்தார்.

பின்னர் மாலை 4-30 மணிக்கு பொதுச்செயலாளர் அவர்கள் குதிரைகள் பூட்டப்பட்ட சாரட்டில் அமர்த்தப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக பாண்டு—வாத்தியங்கள் முழங்க—நாதசுர இன்னிசையுடன் தோழர் து. காசிநாதன் தலைமையில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார் தோழர்கள் கா. மு. ஷெரீப் பி, சந்தானம் ஆகியோர் குதிரை மீதமர்ந்து ஊர்வலத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டு வந்தார்கள ஊர்வலத்தில் ஆங்காங்கே பொதுமக்களும் கழகத் தோழர்களும் குளிர்ப்பானங்கள் — இனிப்புப் பண்டங்களும் — வழங்கினர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட பல்லாயிரக் கணக்கானோர் இலட்சிய ஒலிகளை முழங்கிக் கொண்டு வந்தனர்.

மாலை 6-30 மணிக்கு ஊர்வலம் நகரப்பூங்காவை அடைந்ததும் தோழர் ராசன் குழுவினர் தமது இசை நிகழ்ச்சியைத் துவங்கி எல்லோரையும் மகிழ்வித்தனர். தோழர்கள் நாதன் என். கிட்டப்பா ஆகியோர் யாவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினர். பின்னர் இரா. ஜோசப் தலைமையில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும் தி. மு க. வின் நடைமுறைத் திட்டங்களை விளக்கியும் திராவிட நாடு திராவிடருக்காக வேண்டிய அவசியத்தை புள்ளி விவரங்களுடன் வலியுறுத்தியும் இந்தி மொழித் திணிப்பைக் கண்டித்தும் பேசினார்.

பொதுச்செயலாளருக்கு ஊர்வலத்திலும்—பொதுக்கூட்டத்திலும்— உள்ளூர் —வெளியூர் — கழகங்கள்—படிப்பகங்கள்—மன்றங்கள் – ஆகியவற்றின் சார்பில் ஏராளமான கைத்தறி ஆடைகளும்—மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

திராவிடப் பூங்கா

வந்தைவேள்

மங்கா மாமலை !

இமயமலையா ? பொதிகை மலையா ? பல்லவபுரச் (பல்லாவர) சிறுமலையா ? இல்லை! இல்லை! அம்மலைகளெல்லாம் ஒரு வேளை மங்கினாலும் மங்கிப்போகும்! ஆனால் ஒரு பெருமலை! என்றும் மங்காப் புகழுடைய மாமலை! ஆம்! மறைமலை! தமிழொளியை என்றும் வீசி நிற்கும் மாமலையேதான் அம்மலை! அம்மலையே மறைமலை அடிகளார் !

பச்சைத் தமிழர்! பழுத்தத் தமிழர்!— என்றால்—மறைமலை அடிகளாரைத் தயங்காது காட்டலாம்! அவர், தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளையுந் துறைபோகக் கற்றுத் தெளிந்த முதறிஞர்!

அவர் கற்றறிந்த ஆங்கிலப் புலமையினையும், வடமொழிப் புலமையினையும், தமிழின், தமிழரின் மேன்மைக்கே பயன் படுத்தினார் என்பது வெள்ளிடைமலை!

அவர் வெளியிட்ட அத்தனை நூல்களிலும் முகவுரையை ஆங்கிலத்திலேயே அமைத்தார். ஆங்கில மோகங் கொண்டோர் அவ்வாங்கில முகவுரையைக் கண்ணுறுங்கால், அதன் எழிலில் மயங்கி, நூற்களினுள் அலைந்தாடும் தமிழ்ப் பொழிலில் மூழ்கிட, ஈர்க்கப் பட்டே தீருவர். அவ்வகையான் ஈர்க்கப் பட்டுத் தமிழமுதை உண்ண உண்ண, அவரது வடமொழிப் புலமை எந்த அளவிற்குப் பயன் பட்டது என்பதைக் கண்டு வியந்து வியந்து, பாராட்டுவர்,

இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதச் சுலோகங்களை எடுத்து வழங்கி, அவைகளுக்கு நேரான தமிழாக்கம் தந்து, ஆரியப் பார்ப்பனர்கள் தம்மூரது ஈடு இணைகாணு நாகரிகத்தை எங்ஙனம் சீர்குலைத்தார்கள் என்பதனைத் தெள்ளிதிற் காட்டுவித்தார். ஆரியப் பார்ப்பனர்களின் வஞ்சகத்தையும், சூதுதனையும், சூழ்ச்சியையும், அநாகரிகத்தையும் அம்பலமேடையேற்றிச் சாடு சாடு என்று ஆதாரத்தோடு சாடினார். அவர் தமிழர்! ஏன் 'சூத்திரர்'! வேதங்களைக் கரைத்துக்குடித்தாரே, வேத விதிகளின்படி அவர் காதில் ஈயங் காய்ச்சி ஊற்ற முடிந்ததா? அவரது நாக்கைத்தான் அசைவற்றுப் போகச் செய்ய முடிந்ததா ?

அத்தகைய ஆற்றல் வாய்ந்த தமிழ் வள்ளலை, தமிழர்கள் மறந்துதான் விடுகிறார்கள்! நினைவு கூருதல் விடத்தான் செய்கிறார்கள்!

மறைமலை அடிகள் 1950-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், பதினைந்தாம் நாள் மறைந்தார். மறைந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. நினைவு கூறத்தக்க விழாக்கள்?—எங்கே விரல் விடுங்கள்!...தமிழர் தமிழரைப் போற்றும் விதம் இதுதானா ?

அவர் அப்பழுக்கற்றச் சைவர். சைவ மதவாதி என்பதனால் லோகாயுதவாதி அல்லது பொருள்முதல்வாதிகளுக்கு விரோதியானார்.

அவர் சைவராயிருந்து பிள்ளையார் பிறப்பையும், ஆறுமுகத் தோற்றத்தையும் விளக்கும் கந்த புராணத்தையும், சிவமகா புராணத்தையும், அவைகளைப் போன்ற மற்ற புராணங்களையும், இட்டுக் கட்டிய கற்பனைக் கந்தல் சரக்குகள் என மண்டையிலடிப்பாரானார். அப்புராணங்களை ஓம்பும் சைவர்களைப் போலிச் சைவர்கள் என்று கடிந்துரைத்தார். எனவே அவர் அத்தனை சைவர்களுக்கும் விரோதி.

அவர், தாம் ஒரு தனித்த மேதை என்ற "மமதை" பூண்டவர். அவரை அணுகுபவரிடம் கண்டிப்பு காட்டுவார். கூடிப் பழகுங் குணமற்றவர். என்பதெல்லாம் ஒருசாராரின் கூற்று. அச்சாராருக்கு அவ்வகையில் அவர் விரோதி.

வைணவ மதத்தை ஒப்பவே மாட்டார். அது இடைச்செருகல் மதம் எனக் கூறிட்டார்! இராமாயணத்தை இறக்கித் தூற்றினார்! எனவே அவர் வைணவ சமயத்தவரின் வைரி!

எல்லாம் எப்படியோ இருக்கட்டும். மறைந்த பின் மறைந்தவரைப் பற்றிய இடித்துரைகள் எடுபடா. ஆகவே அவை கூடா.

அவர் தனித் தமிழுக்கு உழைத்த உழைப்பு—அம்மம்ம—எம்மட்டு! முல்லைப் பாட்டு ஆராய்ச்சி — பட்டினப் பாலை ஆராய்ச்சி — முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் — பழந்தமிழ்க் கொள்கையே சைவமதம்—சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்—வேளாளர் நாகரிகம் — தமிழ் நாட்டவரும் மேல்நாட்டவரும்—தென்புலத்தார் யார்?—இந்தி பொது மொழியா?—குமுதவல்லி — கோகிலாம்பாள் கடிதங்கள் மக்கள் நூறாண்டு வாழ்க்கை—சாகுந்தல நாடக ஆராய்ச்சி—சிந்தனைக் கட்டுரைகள் —சிறுவர்க்கான செந்தமிழ்—மாணிக்கவாசகர் வரலாறு—இவை அவர் எழுதிய நூல்களுள் மாதிரிக்கு சிலவே இன்னும் அநேக புத்தகங்கள் எழுதி வெளிட்டுப் போந்தார்.

அவைகளைத் தமிழுக்காக வேண்டியாவது தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் படித்தே தீரவேண்டும். பிறமொழிச் சொற்கள் கலவாவாறு, தனித்தமிழ்ச் சொற்களையே பரவலாகக் கையாண்டு காட்டிய பெருமை குறிப்பாக மறைமலை அடிகளாரையே சாரும்.

தமிழமுது வேண்டுமா ? மறைமலை அடிகளார் தமிழ் எழுத்தைப்படி! தமிழார்வம், தமிழுணர்ச்சி வேண்டுமா ? தமிழ்த் தென்றல் திரு. வி. க. எழுத்தைப்படி!— என்று கூறுமளவுக்கு மேற்கூறிய நம் காலத்து இரட்டைப் புலவர்கள் வாழ்ந்து விட்டுப் போனார்கள். அவர்களை மறப்பதென்பது தமிழையே மறப்பதொக்கும்! தமிழ்நாடு அத்தகைய நல்லிசைப் புலவர்களை, ஆராய்ச்சி மணிகளை, தமிழ்ப்பொழிலை தமிழ்க் கடலை மறவாது, போற்றி வளம்பல பெறுமாகுக!

மறைமலை அடிகளை நினைவு கொள்ளவும், அவர் அளித்துச் சென்ற நூற்குவியல்களைப் படித்து இன்புற அவாவினை ஊக்கவும் அவர் உதிர்த்த சில மணிவாசகங்களைக் கூறி இதை முடிப்போம் :

இனத்தாரைப் போற்றுங்கள் !

மணவினை, பிணவினை முதலியன நடாத்துங் காலங்களில், தமிழ் மக்களில், ஒவ்வொரு வகுப்பாருந் தத்தம் இனத்தவரிலிருந்தே, அவற்றைச் செய்து வைத்தற்குச் சிலரை ஏற்படுத்தி, அவரைக் கொண்டு அவற்றை நடப்பித்துக் கொள்ளல் வேண்டும் !

அறவே விட்டொழி !

தமிழர் தாம் நடத்தும் மணவினை பிணவினைகளுக்கு ஆரியப் பார்ப்பனரை ஆசிரியராக வருவித்து வைத்து நடத்தல் பெருங் குற்றமாமென்று அறிவு நூல்களுங் கூறுகின்றன. ஆதலால் தமிழர் தம் வினைகளுக்கு ஆரியப் பார்ப்பனரை வருவித்தலை அறவே விட்டொழித்தல் வேண்டும் !

நஞ்சினுங் கொடியர் !

முன்னமே உயர்ந்து நிற்குந் தமிழ்ப் பெரியாரையுங் கரவாகக் கெடுத்துத் தாழ்த்தித், தாழ்ந்து கிடக்குந் தமிழரையும் உயரவொட்டாமற பெருந்தடைகளை விளைத்துத் தமிழ் மக்களெல்லார்க்குந் தொடர்பாகத் தீது புரிந்துவரும் பார்ப்பனரை, நஞ்சினுங் கொடியராக நினைந்து, அவர் எவ்வகையிலுந் தம்பால் அணுகுதற்கு இடங்கராது விழிப்பா யிருத்தலே தமிழர் ஒவ்வொருவருங் கருத்தூன்றிக் கைக்கொள்ளற்பாலதாகிய முதற்பெருங் கடமையாம்!

தீரர் !

ஆரியர் பொய்யும், புளுகும், புனைந்து கட்டிச் சொல்லித் தம்மை உயர்த்தும் தீரர்!

மடிகட்டி நிற்பர் !

தமிழ் மொழி ஆரியப் பார்ப்பனர்கட்கு எட்டிக்காயினுங் கசப்பதாகும். இறந்து பட்ட தமது சமஸ்கிருத மொழியினையுஞ் சில நூற்றாண்டுகட்கு முன் தோன்றிப் பல மொழிக் கலப்புடையவாய், வழங்கும் ஆங்கிலம், இந்தி, முதலான மொழிகளையும் எவ்வளவு உயர்த்திப் பேச வேண்டுமாயினும் அதற்கு மடிகட்டி நிற்பர்!...இவர்கள் தமிழ் கற்றது வயிற்றுப் பிழைப்புக்கே யன்றிப் பிறிதன்றென்பது நன்கு புலப்படும்!

தகுதியிலார் !

பழைய நாளில் ஆரியப் பார்ப்பனர் ஆ, எருது. முதலியவற்றைக் கொன்று அவற்றின் இறைச்சியைத் தின்று வந்தமையின், அவர் தமிழ் நாட்டுக் கோயில்களுள் நுழைதற்கும், இறைவன் திருவுருவத்தைத் தொடுதற்குந் தகுதியிலாராக ஒதுக்கி வைக்கப் பட்டனர்!

குறிப்பு :—

மறைமலை அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பைப் பிறிதொரு வேளை எழுதுவோம்

●

இலங்கைத் தோழர்களின் எண்ணம்

●

திராவிடன் இதழ் கடந்த எட்டு ஆண்டுகளாக திராவிட நாட்டிற்கு ஆற்றியபணி மகத்தானது என்று நான் மட்டுமல்ல இலங்கையிலுள்ள வாசகர்கள் அத்தனை பேரும் அறிவர்.

அதிலும் குறிப்பாக திராவிடன் 9-வது ஆண்டு ஆரம்பத்திலிருந்து புதிய அம்சங்களுடன் பொலிவுடன் பவனி வருகிறது.

தோழர் திராவிடப் பித்தன் தீட்டும் திராவிட நாட்டுக் கல்வி வரலாறு படித்துப் பயனடையக் கூடியது. தோழர் திருவேடம் எழுதும் பஞ்சாபில் மூன்று நாட்கள், வந்தைவேள், மா. தங்கவேலர், கௌதமன் ஆகியோரின் கருத்தோவியங்கள் காலத்திற்கு ஏற்றவைகளாகும்.

மேலும் திராவிடன் நல்ல வளர்ச்சியடைந்து வீரநடை போடட்டுமென மனமார வாழ்த்துகிறேன்.

இவ்வண்ணம்—அன்பன்,
ஜே. சோமசுந்தரம்
தலைவர் முத்தமிழ் மன்றம், இலங்கை

ஆசிரியர் அச்சிட்டோர், வெளியிட்டோர் என். வி. நடராசன், சோடு அச்சகம் 16, [illegible] தெரு, சென்னை-1